# ஜனாதிபதி வி. வி. கிரி தெரிவு செல்லுபடியாகும்

JAFFNA ... UNDERGRADUATE ... 12 MAY

Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49

போன்: 389

மலர் 12

இதழ்: 90

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 29 ரபி. அவ். 5 செவ்வாய்க்கிழமை [12-5-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப்பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| 1 வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற்பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு

### 60 நாட்கள் நடந்த விசாரணை



புதுடில்லி, மே 11

இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரியின் தெரிவு செல்லுபடியாகுமென டில்லி சுப்ரீம்கோர்ட் இன்று தீர்ப்பு வழங்கியது.

திரு. வி. வி. கிரி இந்திய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட 4 மனுக்கள் மீதான விசாரணைகள் ஐந்து நீதியரசர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நீதியரசர்களும் ஏகமனதாக தங்கள் தீர்ப்பைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி திரு. கிரி விசாரணையின்போது சுப்ரீம் கோர்ட்டில் ஆஜரானார். முதல்தடவையாக இந்திய ஜனாதிபதி ஒருவர் சுப்ரீம் கோர்ட்டில் ஆஜரானது இதுவே முதல் தடவையாகும்.

இந்திய நீதிமன்ற வரலாற்றில் நீண்ட நாட்கள் விசாரணை செய்யப்பட்ட வழக்கு இது ஒன்றேயாகும். 60க்கும் அதிகமான தடவைகளில் நீதிமன்றம் கூடி இதுபற்றி விசாரணை செய்தது:

நீதியரசர் திரு. சிக்கிரி தலைமையில் நீதியரசர்கள் செலக், பார்க்கவா, நித்தார், ஸி. ஏ. வைத்திலிங்கம் ஆகிய ஐவர் கொண்ட நீதியரசர்கள் இவ்வழக்கை விசாரணை செய்தனர்.

மனுதார் தரப்பில் வழக்கறிஞர் ஸி. மோகன் குமாரமங்கலம் ஆஜராயிருந்தார். செலவுத் தொகையை வழங்குவதற்கு உத்தரவிடும்படி இவர் நீதியரசர்களிடம் கேட்டார். அப்படியான தீர்ப்பு தேவையில்லை என்றும், கோடை காலத்திற்குப் பின்னர் கோர்ட் மீண்டும் கூடி விபரமான தீர்ப்பு வழங்கும்போது அதற்குரிய காரணம் தெரியவரும் என்றும் நீதியரசர் சிக்கிரி தெரிவித்தார்.

ஜனாதிபதி வராககிரி வெங்கடகிரியின் தெரிவு செல்லுபடியாகும் என்று வழங்கப்பட்ட தீர்ப்பைக் கேள்விப்பட்டதும் பிரதமர் இந்திராகாந்தி பங்களூரில் இருந்த திரு: கிரியுடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். பங்களூருக்குச் சென்ற ஜனாதிபதியை மைசூர் முதல் மந்திரி திரு. வரேந்திரபாட்டில் வரவேற்றார். அதைத் தொடர்ந்து திரு. கிரி தமது மனைவியாருடன் பங்களூரிலுள்ள தர்மத்தலா ஆலயத்துக்குச் சென்று வழிபட்டார்.

நீதிமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் பெருந்திரளான மக்கள் நின்றனர். இவ் விசாரணையின்போது 116 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 61 பேர் ஜனாதிபதியின் சார்பில் சாட்சியமளித்தனர்.

கோடைகால விடுமுறைக்குப் பின்னர் கோர்ட் மீண்டும் கூடும்போது தீர்ப்பின் விசாரணை அறிக்கை வாசிக்கப்படும்.

# பன்னிரண்டு கோவில்களை உடைத்துத் திருடினராம்

## தங்கத்தகடுகளை வாங்கியதாகக் கூறப்படும் மூவர் கைது

யாழ்ப்பாணம், செவ்.

கோயில் உடைத்து திருடியது சம்பந்தமாக கைது செய்யப்பட்ட கந்தையா இராசநாயகம் கடந்த மூன்று மாதங்களில் 12 கோயில்களில் திருட்டு நடத்தியதாக பொலிஸ் விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ளாராம்.

இவர் திருடிய தங்கத் தகடுகளை வடபகுதியிலுள்ள மூன்று நகைவியாபாரிகளுக்கு விற்றதாக பொலிஸ் விசாரணையில் தெரிவித்ததைத் தொடர்ந்து அந்த மூவரையும் பொலிசார்கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளனர். யாழ்ப்பணத்தைச் சேர்ந்த ஒரு நகைவியாபாரியும் சாவகச்சேரியைச் சேர்ந்த இருவருமே கைது செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டவர்களாவார்கள்:

சந்தேகத்துக்கிடமான தங்கப்பவுண்களை விற்க வருபவர்கள் பற்றி தமக்குத் தகவல்தந்துநகைவியாபாரிகள் ஒத்துழைப்பு நல்கிறார்களில்லையே என்று வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு. ஆர் சுந்தரலிங்கம் கவலைதெரிவித்தார்.

சந்தேகத்திற்கு இடமான எந்தநகைகளும் விற்பதற்கு கொண்டுவந்தால் உடனடியாகத் தமக்குத் தகவல்கள் தந்துதவும்படி வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் கேட்டுக்கொண்டார்.

## புகைவண்டி முன் பாய்ந்து வாலிபன் தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்

தவருன வழியில் சென்ற மகனுக்கு தந்தை புத்திமதி கூறியபோது அவர் புகைவண்டி முன்னல் பாய்ந்து தற்கொலை செய்துகொண்ட சம்பவம் நேற்று நாவற்குழியில் நடந்துள்ளது.

குருநகரைச் சேர்ந்த அ. ஜெயா என்ற 27 வயது வாலிபனின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரியவந்தது.

இறந்தவரின் உடல் புகையிரத பாதைக்கு அருகில் துண்டாக்கப்பட்டு காணப்பட்டது. மரணவிசாரணையின்போது அரியாலையைச் சேர்ந்த க. வீரசிங்கம் சாட்சியமளிக்கையில், காலை 8-30 மணிக்கு புகைவண்டி வந்தபோது இறந்தவர் பெட்டிக்குள் பாய்ந்ததாக கூறினர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணையின்பின் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இம்மாத இறுதியில் ஜீ. சி. ஈ. முடிவுகள்

சோட்டை, திங்கள்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜீ. சி. ஈ. பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளியாகுமெனப் பரீட்சைப் பகுதி நேற்றுத் தெரிவித்தது.

பரீட்சை விடைத் தாள்கள் திருத்தஞ்செய்யப்பட்டு கல்விப் பகுதிக்கு வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக பரீட்சைப் பகுதி ஆணையாளர் தெரிவித்தார். இம்மாதம் 15ந் திகதிக்கு முன்னர் பெறுபேறுகள் அனுப்பப்பட்டுவிடுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

## ஐ. தே. கட்சியை இ. தொ. கா. ஆதரிக்கும்

### நிர்வாக சபைக் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, திங்கள்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியை எதிர் வரும் பொதுத் தேர்தலில் ஆதரிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளது.

நேற்றுக் கூடிய மேற்படி காங்கிரஸின் நிர்வாகசபை கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் தொண்டமான் தெரிவித்துள்ளார். அவர் மேலும் இவ்விடயம் பற்றித் தெரிவிக்கையில் தொழிலாளர்களுக்கு இரு பெரும் அரசியல் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கியதேசியக் கட்சி ஆகியன செய்தவை பற்றி ஆராய்கையில் இரு கட்சிகளும் குறிப்பிடத்தக்க நன்மை செய்யவில்லையெனினும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியோடு ஒப்பிடுகையில் ஐக்கியதேசியக் கட்சி அதனிலும் பார்க்க நன்மை பயப்பதாய் உள்ளதால் தொழிலாளர் காங்கிரஸ் அதை எதிர்வரும் தேர்தலில் அதை ஆதரிப்பதாகமுடிவு செய்துள்ளதுஎனக் குறிப்பிட்டுள்ளார். (சி பி ஏ)

## ‘யாழ்ப்பாணத்தில்கூறியதை இங்கு கூறத்தயக்கமேன்

### கூட்டணியைச் சாடுகிறார் பிரதமர்

புசறை, திங்கள் கருத்தை மற்றொரு இடத்

## “தமிழ் ராஜ்யத்தை நவம் எந்த முறையில் பெறுவர்”

தத்தாலிங்கம் கேள்வி

## கரையோர மக்களுக்கு சேவை செய்வதே லட்சியம்

—ஜி.ஜி.

யாழ்ப்பாணம், செவ்.

கரையோரத்தில் வாழ்கின்ற மக்களின் நலனையே நான் காலம்முழுவதும் கருத்தில் வைத்திருக்கின்றேன்: பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1948-ம் ஆண்டில் இருந்த நிலையிலும் கடற்றொழிலாளர் விருத்தியடைவதற்கு யான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இங்கு கூறத் தயக்கமேன்

## கூட்டணியைச் சாடுகிறார் பிரதமர்

பசறை, திங்கள்

'யாழ்ப்பாணத்தில் நடைபெற்றகூட்டணிப் பிரசாரக் கூட்டமொன்றில் லங்கா சமசமாஜக் கட்சிகாரியதரிசி பேசுகையில் தமிழுக்கும் சிங்களத்துக்கும் கூட்டணி சமஅந்தஸ்து வழங்கும் எனக் குறிப்பிட்டுள்ளார். இதை ஏன் இந்தக்கூட்டணித்தலைவர்கள் பசறையில் கூறமுடியாது'?.

பசறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றியபிரதமர்கேள்வியொன்றைக்கேட்டார.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூட்டணியினர். இடத்துக்குத்தக்கவாறு தங்கள்பிரசாரக்கூட்டத்தை நடாத்துகின்றனர். ஒரு இடத்தில் கூறிய அதே கருத்தை மற்றொரு இடத்தில் முன்னையதற்கு முரண்பட்டதாகக்கூறுகின்றனர். ஆனல் நாங்கள் ஒரு இடத்தில்கூறியதையே அப்படியே நாட்டின் எந்தப்பகுதியிலும் கூறுகிறேம்.

மக்கள் குழுக்கள் போன்ற அவர்களது நாட்டின் சுதந்திரத்துக்கு ஆபத்துவிளைவிக்கும் கொள்கைகள் நாட்டினது பொருளாதரத்தை உடனடியாக வீழ்ச்சியடையச் செய்யும் அவர்கள் அதிகாரத்திலிருந்த போது காட்டிய இனமத வேறுபாடுகளை மக்கள்நன்கு அறிவர் எனக் குறிப்பிட்டார்.

திரு. அமரசிங்கிரதுஞயக்கா திருமதி லிலியன் பீரிஸ், வணகுணரத்ன தேரோ உட்படப்பலர் உரையாற்றினர்.

# ... எந்த முறையில் பெறுவார்”

## சுந்தரலிங்கம் கேள்வி

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் திரு. செ. சுந்தரலிங்கம் எழுதுவதாவது;-

தங்கள் பிரதிநிதியிடம் திரு. வி. நவரத்தினம் கூறியுள்ளவை விஷயமாக நான் தெரிவிக்க வேண்டியிருப்பதாவது. அவர்சென்ற ஏப்ரல் மாதம் 7-ந் திகதி நடந்த ஓர் ஆலோசனைக் கூட்டத்தைப்பற்றியேகுறிப்பிட்டுள்ளார் தேர்தல்இயக்கத்தைக் கூட்டாகச்சேர்ந்தது நடத்துவது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பதைப்பற்றி ஆராயவே அந்தஆலோசனை நடைபெற்றது. அக்கூட்டம் முடிந்ததும் தயாரித்த நகல் அறிக்கையை இத்துன் அனுப்பியுள்ளேன் ஒருகாரியத்தை நிறைவேற்ற.

சாம, பேத, தான, தண்டம் எனும் நான்கு உபாயங்களே தமிழர் கையாளும் பழைய முறைகளாகும். டாக்டர் கங்காதரனின் அன்பான முயற்சி காரணமாக நாங்கள் முன்னதாகவே சந்தித்தபோதுதான் நான் அதைக்கூறினேன் இந்தத் தமிழ் முறைகளை ஆங்கிலத்தில் அவ்வளவு சரியாக மொழிபெயர்ப்பது முடியாதென்றும் அவர் சொன்ஞர்தான் நான் தமிழ் அறிஞனல்லவென்றும், ஒரு நல்ல தமிழ் மாணவரே இதைக் கூறிஞரென்றும் தெரிவித்தேன் ''பேத'' என்ற சொல்லுக்குத்தான் சரியான மொழிபெயர்ப்பு இல்லை என்ருர் அவர்.

அவர் தமது தனித் தமிழ் ராஜ்யத்தை எப்படிப் பெறப்போகிருர் என்ற முறையை அவர் தமதுஅறிக்கையில் தெரிவிக்காதது குறிப்பிடத்தக்கதாகும், என்ன முறையை அவர் கைக்கொள்ளலாமென நம்பியிருக்கிருர் என்பதை இப்போதாவது அவர் அன்புடன் தெரிவிப்பாரா? டாக்டர் கங்காதரர் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தின் போது சத்தியாக்கிரக வழியைத்தான் பின்பற்றப் போவதாக அவர் என்னிடம் தெரிவிக்கல்லை என்று கூறுகிருரா?

எனக்கு அமைச்சர் பதவி கிடைப்பதாக இருந்தால் அதை ஒப்புக்கொள்வேஞ என்று அவர் கேட்டபோது, பொதுத் தேர்தல் முட்டைகள் பொரிக்கப்படுமுன் குஞ்சுகளை எண்ணுவது விவேகமல்ல' என்று அவருக்கு நினைப்பூட்டினேன். அவரது'' முட்டை பொரிப்பதும்'' இன்னும் நிச்சயமாக வில்லை.

### ஆலோசனைக் கூட்ட விபரம்

சுன்ஞகத்தில் சென்ற ஏப்ரல் மாதம் 7-ந் திகதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்ட விபரம் வருமாறு:

பொது நண்பர்களின் முயற்சியால் இன்று திரு. செ. சுந்தரலிங்கமும், திரு. வி. நவரத்தினமும் சந்தித்துப் பேசினர்.

தொன்றுதொட்டு தமிழர் வாழும் பகுதிகளிலேயுள்ள தேர்தல் அனுபவத்தைக் கொண்டு, வருகிற பொதுத் தேர்தலில் ஒரு பொதுவான தேர்தல் கொள்கையையும், வேலைத் திட்டத்தையும் தயாரித்து வாக்காளர்முன் சமர்ப்பிக்கலாமென்று அவர்கள் கருதினர்.

ஈழத் தமிழ்மக்களின் நல உரிமைகளையும் சுபீட்சத்தையும் பாதுகாக்கவும், அவர்கள் உயிருடன் வாழ்வதற்கும் கூட ஈழத் தமிழகத்தை மீட்கவேண்டியது மிகமிக அவசியமென்பதையும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

ஈழத்தமிழரின் இன்றைய

[4-ம் பக்கம் பார்க்க ]

பரீட்சைப் பகுதி ஆணையாளர் தெரிவித்தார். இம்மாதம் 15ந் திகதிக்கு முன்னர் பெறுபேறுகள் அனுப்பப் பட்டுவிடுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

— —

### விமான விபத்தில்

## அ. தொ. ச. தலைவர் மரணம்

வாஷிங்டன், மே 11

அமெரிக்கத் தொழிற்சங்கத் தலைவர் திரு. உவால்டரும், அவரது மனைவியும் மெக்ஸிக்கனுக்கு அருகில் நடந்த விமான விபத்தில் கொல்லப்பட்டனர்.

நேற்றிரவு ஐக்கிய தொழிற் சங்கக் கல்லூரி ஒன்றுக்குப் புறப்பட்டுச் சென்ற இவர்களது விமானத்தில் கூட இருந்த மற்றும் இரு பிரயாணிகளும் கொல்லப்பட்டனர்.

— ஜி.ஜி.

யாழ்ப்பாணம், செவ்.

கரையோரத்தில் வாழ்கின்ற மக்களின் நலனையே நான் காலம்முழுவதும் கருத்தில் வைத்திருக்கின்றேன்: பலபிறநாடுகளுக்கும்சென்று மீன்பிடித்தொழிலின் நுட்பங்களையெல்லாம் படித்து உணர்ந்திருக்கின்றேன். என்னுடைய மக்கள் நலனுக்காக இன்றைக்கும் உழைக்க முன்வந்துள்ளேன்.''

இவ்வாறு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் நேற்று நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுத்திடலில் நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

இக்கூட்டத்துக்கு யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. வீரசிங்கம் தலைமை வகித்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

1948-ம் ஆண்டில் இருந்த நிலையிலும் கடற்றெழிலாளர் விருத்தியடைவதற்கு யான் கடற்றெழில் மந்திரியாக இருந்த காலத்தில் நிறைவேற்றிய திட்டங்கள் பயனளிக்கின்றன.

கணவாய் ஓடு, சுறுமீன் செட்டைகள் போன்றவற்றை வெளியே ஏற்றுமதி செய்யவும், தொழிலைச்செய்கின்றவர்களுக்கும வாங்குகின்றவர்களுக்குமிடையே யுள்ள தரகர் வாய்ப்பை பெறுதவகையில் நேரடியாகத் தொழிலாளர்கள் வாய்ப்பைபெறுவதற்கான வழிகளை செய்வதுதான் எனது நோக்கமாகும்.

நானும் கரையோரத்து மகனே. என்னுடையசேவை

(4-ம் பக்கம் பாரக்க)

# “இதுவரை நாம் எந்தத் தியாகமுமே செய்யவில்லை’

## — இராசதுரை

தாவடி, திங்கள்

''நடுக்கடலிலே சுக்கானில்லாக் கப்பலின் நிலை போன்றும் போர்க்களத்திலே சேனைத் தளபதியில்லாத நிலை போன்றும் ஈழத்தமிழினம் அல்லல் பட்ட சமயம், தமிழ் மக்களின் இன்னல்களை நீக்கி வழிநடத்தஆரம்பிக்கப்பட்டகட்சி தமிழரசுக் கட்சிதந்தை எஸ். ஜே. வி. க்குஇடவலக்கைகைள்போல இருந்து ஒத்துழைப்பு நல்கியவர்கள் கோப்பாய்க் கோமன் வன்னியசிங்கமும் டாக்டர் ஈ எம். வி. நாகநாதனுமாவார்கள். தமிழுக்காக, தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காக உழைப்பதையே தற்போது தொழிலாகக் கொண்டிருக்கின்ருர். டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்''.

இவ்வாறு கொக்குவில் மாத்தனை முருகமூர்த்தி கோவிலுக்கண்மையில் நல்லூர்த் தொகுதி தமிழரசுக் கட்சி வேட்பாளர் டாக்டர் ஈ. எம் வி. நாகநாதனை ஆதரிக்குமுகமாக நடாத்தப்பட்ட பிரசரக் கூட்டத்தில் பேசும் போது மட்டுநகர் முன்னுள் ஆட்சி மன்ற உறுப்பினர் திரு: செ. இராசதுரை கூறினர்.

கொக்குவில் கிராசபை உறுப்பினர் திரு. ந. அருணசலத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. இராசதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது.

''ஆட்சிமன்றத்திலேயும் மந்திரிமார்களிடத்தும்துணிவோடு எதுவிஷயத்தையும் கேட்டு தனது தொகுதி மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ் மக்களுக்கும் உதவி புரியும் திறமையுடையவர் ஈ. எம். வி.

தொகுதிக்குத் தொகுதி வேலையில்லாத் திண்டாட்டம். பிரதம அமைச்சருடைய தொகுதியிலுமுண்டு, மற்றும் சகஅமைச்சர்களுடைய தொகுதியிலுமுண்டு எந்தநாட்டு இளைஞர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யமுன்வரவில்லையோ அந்நாடு அடிமைப்பட்ட நாடகவே இருக்கும்.

இந்தியநாடு சுதந்திரத்துக்காக 150 ஆண்டுகள் போராடியது. நாம் என்ன தியாகம் செய்துவிட்டோம். இதுவரை எந்தத் தியாகமும் செய்யவில்லை அந்நிலையும் அண்மிக்கவில்லை'

நல்லூர்த் தொகுதி முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் டாக்டர் ஈ. மு, வி. நாகநாதன், பல்கலை ஆசிரியர் எம். கே. அந்தனிசில், திரு. பற்குணராசா உட்படப் பலர் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

# “அத்துளு குழாய் நீர்த்திட்டத்திற்கு நானே பணம் ஒதுக்கினேன்”

## — செனட்டர் திருச்செல்வம்



உடுப்பிட்டி, திங்கள

''கரவெட்டி அத்துளுகுளகுழாய் நீர் விநியோகத் திட்டத்தை நான் தடுத்து நிறுத்த முயன்றதாக முன்ஞள் உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் கூறிவருவது தவருனது. திரு. சிவசிதம்பரத்தின் வேண்டுகோளை ஏற்று நான் இத்திட்டத்திற்கெனப் பணம் ஒதுக்கினேன். இதன் மூலம் நான் எனது அமைச்சர் பதவியைப் பாரபட்சமற்ற முறையில் நிர்வகித்ததை யாவரும் உணர்ந்து கொள்ளலாம்''

இவ்வாறு முன்னுள் உள்ளூராட்சி அமைச்சரும், செனட்டருமான திரு. எம். திருச்செல்வம் உடுப்பிடித் தொகுதித் தமிழரசு அபேட்சகர் திரு. கே. ஜெயக்கொடியை ஆதரித்து நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

கரவெட்டி கிழக்கிலுள்ள துன்னுலை நுணுவில் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் உள்ளமைதானத்தில் வழக்கறிஞர் திரு. வி. செல்லையா தலைமையில் இக்கூடட்ம் நடைபெற்றது. திரு. திருச்செல்வம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''அத்துளு குழாய் நீர்த் திட்டம் உருவாகியதில்எனக்கும் ஓரளவு பங்குண்டு. இந்த உண்மையை மறந்துவிட்டனர். நான் மந்திரி பதவி வகித்தபோது எனது அமைச்சில் லஞ்சம், ஊழல் போன்ற வற்றிற்குஇடமளிக்காது நிர்வாகத்தை நடாத்தினேன். நாம் மந்திரிப் பதவியைத் தேடிப் போகவில்லை அது தாஞகவே வந்தது.

தமிழினத்துக்கும், தமிழ் மொழிக்கும் தீங்குவந்ததால் மந்திரிப்பதவியை உதறித் தள்ளினேம். தமிழ்மக்களுக்கு நன்மை தரக்கூடிய மாவட்டசபை, தமிழ்மொழி விசேஷ மசோதா பல்கலைக் கழகம் போன்ற வற்றை எதிர்த்தவர்கள் தமிழ் மக்களுக்கு நன்மை செய்வார்கள் என்று நினைக்கவும் முடியுமா'':

உடுப்பிட்டித் தொகுதித் தமிழரசு வேட்பாளர் திரு. கே. ஜெயக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

இன்று அரசியலில் பச்சோந்தி வாழ்க்கையைப் பலர்மேற் கொண்டுள்ளனர். ஆனல் எமது கட்சியில் மருந்துக்குக் கூட இப்படிப் படவர்கள் கிடையாது. இப்படியானவர்களுக்குத் தமிழரசுக்கட்சியில்இடமே இல்லை எம்மைவழிநடத்தும்தலைவர் திரு. செல்வநாயகம் ஒரு போதும் தமது கொள்கையிலிருந்து மாறியதுகிடையாது அவர் அன்றும், இன்றும் சமஷ்டியே கேடகிருர்.

தமிழ்பேசும் மக்களின் எதிர்காலம் என்னவாகும் என்பதைத் தமிழ் மக்களாகிய நாம் உணரவேண்டும்' யார் உண்மையில் தமிழினத்தைக் காப்பாற்றி வழிநடத்தக்கூடியவர் என்பதையும் நன்கறியவேண்டும் தமிழரசுக்கடசி மீது நம்பிக்கைதான் தமிழினத்தைச்சுபீடசப் பாதைக்கு இட்டுச் செல்லும்''

முன்னுள் பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், திருவாளர்கள் கே. சண்முகநாதன், எஸ் சந்திரகாசன் பெனடிக்ற், மு. ஆலால சுந்தரம் ஆகியோரும் பேசினர்.

— —

## நாத்தாண்டிய தேர்தல் ஆட்சேப மனு தள்ளுபடி

கொழும்பு, திங்கள்

நாத்தாண்டிய தொகுதியில் கடந்த தேர்தலில் யு. என். பி. அபேட்சகர் திரு. ஹியு. பெர்ஞண்டோ தெரிவு செய்யப்பட்டதை ஆட்சேபித்துசுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்தவழக்கு இன்றுதள்ளுபடி செய்யப்பட்டது.

# ஒலிபெருக்கியில் மாற்று கட்சியைத் திட்டாதீர்

## லைசென்ஸ் ரத்தாகும்

யாழ்ப்பாணம், செவ்

வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் அரசியல்கூட்டங்கள் பற்றி பிரசாரம் செய்யும் சிலர் மாற்றுக் கட்சிகளையும் திட்டிவருகிருர்களாம். இது சம்பந்தமாக 3 வாகனங்கள் தடுத்துநிறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டன,

காங்கேசன் துறையில் மாற்றுக்கட்சியைத் திட்டிய ஒருவருடைய வாகனம் பொலிஸ்நிலையம் கொண்டு செல்லப்பட்டது என்றும் அறிவிப்பாளர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் லைசென்ஸ் ரத்துச் செய்யப்பட்டது என்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடபகுதி அபேட்சகர்களை அழைத்து, பொலிஸ் சுப்பிரின்டன் கூட்டிய மகாநாட்டில் வாகனங்களில் பொருத்தப்பட்ட ஒலிபெருக்குகளில் ஏனைய கட்சிக்காரரைத் திட்டுவதில்லை என்ற முடிவு அபேட்சகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும் சிலர் ஏனைய கட்சிகளைத் திட்டும் பணியிலும் மும்முரமாக ஈடுபட்டுவருவதாக பொலிசாருக்குப் பலத்த புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீதிகளில் நின்றுபிரசாரம் செய்யும்போது ஏனைய கட்சிகளைக் குறைகூறுபவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர் சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இ. சோ. முன்னணிக்கு

## ‘பிரதமர் பயப்படுகிறார்’

### — பதியுதீன்

அக்கறைப்பற்று, திங்கள்

நாங்கள் முதன் முதலாக இஸ்லாமிய சோஷலிச முன்னணியை ஆரம்பிக்கும் போது ஜனப் எம். எச். முகமத்போன்ற முதலாளித்துவ முஸ்லிம்கள் சிலர் இழிவாகக் கூறினர். ஆனல் இன்று அவர்களும் பிரதமர் டட்லி சேனநாயக்காவும் எங்கள் கட்சியையிட்டுப் பீதியடைந்துள்ளார்கள்'.

நிந்தாவூரில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய இஸ்லாமிய சோஷலிச முன்னணித் தலைவர் அல்ஹாஜ்பதியுதீன் முகமத் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் நான் கல்வி அமைச்சராகவிருந்த பொழுது முஸ்லிம் மாணவர் கல்விக்காகப் பெரும் தொண்டாற்றினேன். 67 ஆகவிருந்த முஸ்லிம் பாடசாலைகளை 200 ஆக ஒருநாளில் அதிகரித்

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

ஜீ. சி. ஈ. (Prep) (சாதாரணம்) (உயர்தரம்) ஆகிய வகுப்புகளுக்கு விஞ்ஞான கணித பாடங்கள் கற்பிக்கக்கூடிய அனுபவமும் திறமையும் உடைய ஆசிரியர்கள் தேவை. 17-5-1970-ம் திகதிக்கு முன்னதாக சிக்கனக் கல்வி நிலையம், (The Economy Education Centre) சுன்னுகம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 2221

### வகுப்புக்கள்

'பாமசிஸ்ற்' பரீட்சைக்கு (External Pharmacist Examination) வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விக்னேஸ்வரன், 7, பழம் ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2119

### தேவை

''பெற்ரோல் நிரப்பு நிலையங்களுக்கு பம்பர்கள் உடனே தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் பிணைப்பணம் கட்டக்கூடியவர் மட்டும் விண்ணப்பிக்கவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர், யாழ்ப்பாணம். 2218

வான் சேல்ஸ் மென் தேவை, பிணைப்பணம் கட்டக் கூடியவர் நேரில் விண்ணப்பிக்கவும். தேவன்ஸ் இன்டஸ்றீஸ் 51, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 2120

### விற்பனைக்கு

நவீன வசதியுள்ள காணியுடன் கூடிய வீடும், கடையும் விற்பனைக்குண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். N. இராசதுரை, முஸ்லிம் கல்லூரி ரோட், கற்குளலேன், யாழ்ப்பாணம். 2219

புத்தகம்:

பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் தற்போதைய அரசியல் நிலையை விளங்க வைக்கும் ஒரு வழிகாட்டி நூல்: 'இலங்கையின் அரசியலும் அரசியல் கட்சிகளும்' விலை ரூ. 1-60 சதம். ஸ்ரீ லங்கா, சண்முகநாதன் புத்தகசாலைகளிலும் மற்றும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம், 2217

வீடு:

புங்கங்குளம் ரோட், கொழும்புத்துறையிலுள்ள 23-ம் நம்பர் வீடு 2 1/2

கோப்பாய், திங்கள்

கோப்பாய் சித்திரவேலாயுதசுவாமி கோவில் மகோற்சவம் இன்று துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவம் 19, 20-ந் திகதிகளில் நடைபெறும் தேர் தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும்.

### தேவை

யாழ். நகரில் பிரபல வர்த்தக ஸ்தாபனமொன்றுக்கு கடைக் கணக்கு எழுதுவதில் 5 வருடத்திற்கு குறையாத அனுபவமுள்ளவரும், வியாபார அனுபவமும் ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு செய்யக் கூடிய வருமான நடுத்தர வயதுடைய ஒருவர் தேவை. கடைசியாக பெற்ற நற்சாட்சிப் பத்திரங்களுடன் சொந்தக் கையெழுத்தில் 17-5-70-க்கு முன்னர் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. 2224 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2224

## மரண அறிவித்தல்

### திரு. சின்னப்பொடியன் வேலன்

புங்குடுதீவு 11-ம் வட்டாரம் திருமதி மரியம்மாவின் அருமைக் கணவரும் திருமதி நா. காத்தை பொன்னுச்சி அவர்களின் தந்தையாரும், திரு. நாகமணி சின்னப்பு. சிற்றம்பலம், வல்லிபுரம், பொன்னம்பலம் ஆகியோரின் தந்தையுமாகிய திரு. சின்னப்பொடியன் வேலன் மரணமடைந்துள்ளார். அன்னாரின் பூதவுடல் இன்று புங்குடுதீவு 11-ம் வட்டாரத்திலிருந்து பகல் 10-00 மணிக்கு கேரதீவு மயானத்திற்கு நல்லடக்கம் செய்ய எடுத்துச்செல்லப்படும். 2223

## கேள்வி அறிவித்தல்

### கருநாவல்பற்றுத் தெற்கு கிராமசபை

கீழ்க்காணும் வேலைகளுக்கு பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்த வேலைசெய்பவர்களிடமிருந்து 25-5-70ஆம் திகதி காலை 10-00 மணிவரை கேள்விகள் என்னுல் ஏற்றுக்கொள்ளப்படும். கீழ்க்காணப்படும் விபரப்படி கேள்விப் பத்திரக் கிரயமும் கேள்விப்பிணையும் செலுத்துவதன்பேரில் 24-5-70ம் திகதி நண்பகல் 12 மணிவரை இச்சபை அலுவலகத்தில் பெறக்கூடிய பத்திரங்களிலேயே கேள்விகள் அனுப்பப்படவேண்டும். ஏனைய விபரங்கள் இச்சபையின் அலுவலகத்திலும், உள்ளூராட்சி அமைச்சின் வவுனியா அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்.

| | வேலையின்பெயர் | கேள்விப் பத்திரக் கிரயம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|
| | | ரூ.ச. | ரூ.ச |
| 1. | அம்பகாமம் புதுக்குடியேற்ற ரோட் | 10-00 | 25-00 |
| 2. | விசுவமடு ரோட்டு | 15-00 | 50-00 |

கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

# வேட்பாளர் அறிமுகம்

## காங்கேசன்துறைத் தொகுதி



எஸ்.ஜே. வி. செல்வநாயகம்

[தமிழரசுக் கட்சி]

இலங்கைத் தமிழரசுத் தந்தையெனப் போற்றப்படும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் 1947ம் ஆண்டிலிருந்து 1970 வரை காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிட்டு வருகிருர். 1952ம் ஆண்டில் இவர் திரு. எஸ். நடேசபிள்ளையினுல் தோற்கடிக்கப்பட்டபோதிலும் 1956-ம் ஆண்டில் தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு மேலோங்கிய காலத்தில் அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டியுள்ளார். அன்றிலிருந்து இன்றுவரை இந்தத்தொகுதியின் ஆட்சி மன்ற உறுப்பினராகத் தொடர்ந்து பணியாற்றிவருகிருர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியே திரு. செல்வநாயகம் அவர்களின் ஆத்மபலத்தில் நம்பிக்கை வைக்கும் அளவுக்கு கட்சி இலட்சியங்களை வழிநடத்திவருகின்ருர்.

ஈழத்தில் சுயநிர்ணயமேயற்று இன்னல்பட்டு வாழும் தமிழினத்தின் மொழி, கலை கலாசாரத்தை காப்பாற்றவும் தமிழின உரிமைகளைப் பெறவும், சமஷ்டிஆட்சியமைப்பை ஏற்படுத்துவதொன்றே சிறந்ததெனும் கொள்கைக்குள் நின்று கட்சியை இயக்கிவருகிருர்.

(1) இலங்கையையே தாம் வாழும் நாடாகக் கொண்ட தமிழ் பேசும் மக்கள் எல்லோருக்கும் பூரண பிரஜா உரிமை உண்டெனச் சாதித்தல்.

(2) சமூகத்திலுள்ள உயர்வு தாழ்வுகளையும் அநீதிகளையும் முக்கியமாக ஒருபகுதி மக்களிடையே நிலவும் தீண்டாமையை நீக்குவது. இதன் மூலம் இலங்கைவாழ் தமிழ் மக்களை ஒன்று படுத்துதல்.

(3) சாதி. சமயம், இனம், மதம், ஆண், பெண் என்ற அடிப்படையில்வேற்றுமை பாராட்டாது கல்வி தொழில் முதலியவற்றிலே சமசந்தர்ப்பம் வழங்கும் சோஷலிஸ பொருளாதாரத்தை உண்டாக்குதல்

இவற்றையே தமிழரசுக் கட்சியின் முக்கிய இலட்சியமாக வழிநடத்துவதென்பது இவரது திடமான கொள்கையாகும்.

அமைதியும், தன்னடக்கமும், கொள்கையில் அசைக்க முடியாத உறுதியும் படைத்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களை கட்சியில் உள்ளவர்கள் ஈழத்துக் காந்தியென்றும் அழைப்பர். தமிழரசுக் கட்சியின் செயலாக்கம் காந்திய வழியில் அமைந்துள்ளமையே இதற்குரிய அடிப்படைக் காரணமாகும்.

இலங்கையில் மட்டுமல்லாது தமிழரசுக்கட்சியின் பெருமையினுல் கடல்கடந்த நாடுகளிலும் திரு. எஸ் ஜே. வி. அவர்களின் புகழ் பரவியுள்ளது.

0 0 0

### வி. பொன்னம்பலம்

(கம்[illegible])

பிரதிநிதியாகவும், தெல்லிப்பளைக் கூட்டுறவு வைத்தியசாலை உப-தலைவராகவும், யாழ் மாவட்ட சமூக சேவைப்பகுதி ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், ஒரே நேரத்தில் பல இயக்கங்களிலும் முக்கிய பதவி வகித்துவருகிருர்.

சிறந்த மொழிபெயர்ப்பாளரான இவர் அரச மொழித் திணைக்களத்தினருக்காக நீலகண்ட சாஸ்திரியினுடைய தென்னிந்திய வரலாற்று முதற் பகுதியை மொழிபெயர்த்துள்ளார்.

மல்லாகத்தில் பொதுமக்களுடன் தொடர்புக்கெனத் தற்போது திறக்கப்பட்டுள்ள பணிமனையைப் பொதுத்தேர்தல் முடிவு எதுவாகஇருந்தாலும் தொடர்ந்தும் நடத்தத் தீர்மானித்திருக்கிருர்.

காங்கேசன்துறைத் தொகுதியின் முன்னேற்றத்தைக் கருத்திற்கொண்டு 'அபிவிருத்தி ஆலோசனைச்சபை' ஒன்றைத் தெரிவுசெய்யப்படும் ஆட்சிமன்ற உறுப்பினருக்கு உதவும்வகையில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், கிராம முன்னேற்றச் சங்கங்களின் பிரதிநிதிகள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பதிவு செய்யப்பட்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் துணையுடன் நிறுவுவதும் இவரது திட்டமாகும்.

கச்சேரி முறையை ஒழித்து. மக்கள் மன்றங்களை உருவாக்குவதும், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தை அதிகரிக்கச் செய்வதுடன், நாட்டின் நலன் காத்து, மகாவலித் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதும் இவரது நோக்கத்துள் சிலவாகும். அனைவரதும் அடிப்படை உரிமைகளையும் உறுதிப்படுத்த, தமிழ் மொழிக்கும், கலை கலாச்சாரத்துக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தருவேனென்றும் இவர் வற்புறுத்திக் கூறுகின்ருர்.

0 0 0



ஸி. சுந்தரலிங்கம்

(சுயேச்சை)

தனித்துநின்று சாதனைகளைப் புரிவதில் தீரரான திரு. ஸி. சுந்தரலிங்கம் இலங்கைமாதா பெற்ற கல்விமான்களில் முன்னணியில் நிற்பவர்.

இலங்கை ஆட்சிமன்றம் அமைந் 1948ம் ஆண்டிலேயே அதன்பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்ட திரு சுந்தரலிங்கம் திரு. டி.எஸ் சேனநாயக்க அரசாங்கத்தில் வர்த்தகமந்திரியாக இருந்துபெருமை பெற்றவர்

எதிலும் தீவிரமான போக்குடைவர் ஸி சுந்தரலிங்கம் உறுதியாக வாவாடும் திறனுடைவர். எதிர்ப்புகள் எத்தனை மலைபோலமைந்தாலும் அவற்றைத் தனிதது நின்று சமாளிக்கும் வயிரம் படைத்தவர்.

வவனியாத் தொகுதியில் இருமுறை ஆட்சிமன்றப் பிரதிநிதியாகத் தெரிவுசெய்யப்பட்ட திரு. ஸி.சுந்தரலிங்கம்ஒருமுறைஆட்சிமன்ற பிரதிநிதித்துவத்தையே ராஜினுமாசெய்தவர்.

இவர்சைவத்தை தமிழ் ஈழத்தில் காத்தலே தன் கடமையென்ற கருத்துடன் காங்கேசன் துறைத் தொகுயில் முதன் முதல் போட்டியிடுகின்ருர்.

ஈழத்தமிழ் சமுதாயம் முன்னேற முயற்சியெடுத்தல் தமிழின தனிஅரசு உருவாக்குதல் ஆகியவைகளே இவரது இலட்சியங்களில்ன் முன்னிடம் வகிப்பதாகக் கூறுகின்ருர்.

பௌத்த சிங்கள அகங்

கிரிக்கெட்

## மைசூர்கோஷ்டி இன்று வடக்குடன் மோதும்

யாழ்ப்பாணம், செவ்.

மைசூர்கிரிக்கெட்கோஷ்டி இன்று யாழ்ப்பாணத்தில் மோதுகின்றது, இக்கோஷ்டியினர், வடமாகாண 20 வயதுக்குட்பட்ட பாடசாலை தெரிவுக் கிரிக்கெட் கோஷ்டியுடன், யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் ஒரு நாள் போட்டியில் மோதிக் கொள்ளுகின்றனர்.

மைசூர் கோஷ்டிக்கு கிரிக்கெட்விரர் எம். காந்தராசா தலைமைதாங்குகின்ருர். வடமாகாணக் கோஷ்டிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வீரர் கே. தவக்குமார் தலைமை தாங்குகின்ருர்.

இன்று யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணிக்கு போட்டி முடிவடையும்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட பாடசாலை கிரிக்கெட் சங்கக் காரியதரிசி திரு சி தியாகராசா மேற்கொண்டுள்ளார், (தே. நி.)

### 3 பசுக்கள் யாருடையது?

யாழ்ப்பாணம் செவ்வாய்

அண்மையில் 3 பசுக்கள் காணுமற்போனதாகசாவகச்சேரிப்பகுதியைச் சேர்ந்த தச்சன்தோப்பில் சிலர் தேடி வருகின்றனராம். குறிப்பிட்ட மாடுகள் தச்சன் தோப்பிலுள்ள ஒரு வீட்டில் நிற்பதாக அறிவிக்கப்படுகிறது. சொந்தக்காரர் தச்சன்தோப்புச் சந்தி க. வல்லிபுரம் கடையில் விசாரிக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

0 0 0

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்ட திறப்புக்கோர்வை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளலாம்.

### விசேஷ பஸ் சேவை

கோட்டை, திங்கள்

வாக்காளர் வசதியைக் கருதி தேர்தல் தினமான மே 27-ந் திகதி இலங்கைப் போக்குவரத்துச்சபை வாக்களிப்பு நிலையங்களுக்கு விசேஷ பஸ் சேவை ஒழுங்கு செய்துள்ளது.

மேற்படி விசேஷ சேவைகள் தேர்தல் தினத்தன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகி மாலை 6 மணி வரை நடைபெறும். தூர இடங்களுக்கு சேவையிலீடுபட்டுள்ள பஸ்கள் தேர்தலன்று இந்த விசேஷ சேவையில் ஈடுபடவுள்ளன.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
எம்.ஜி.ஆர்-சாவித்திரி
நடித்த
வேட்டைக்காரன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா, பிரி போயா
4 காட்சிகள்
ஜீவஞம்சம் லக்ஷ்மி-ராஜ்குமார்
நடித்த
கோவாவில்
சி. ஐ. டி. 999
(தமிழ்)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30-10-00 மணி
போயா, பிரிபோயா 2-30
சிவாஜி-சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி கல்யாணம்

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya, Pre-poya 4 Shows
Burt Raynolds.
Nicoletta Machiaveli
in
NAVAJO JOE
(adults only)

ராஜா
(யாழ்ப்பாணம்
தினசரி 3 காட்சிகள்

ஷம்மிகபூர்
ராஜ்ஸ்ரீ
நடித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொள்ளலாம், 2217

---

வீடு:

புங்கங்குளம் ரேூட், கொழும்புத்துறையிலுள்ள 23-ம் நம்பர் வீடு 2 1/2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். து. இரத்தின கோபால், 16/1, கில்னர் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 2213

---

| | | பத்திரக் கிரயம் | பிணை |
|---|---|---|---|
| | | ரூ.ச. | ரூ.ச |
| 1. | அம்பகாமம் புதுக்குடியேற்ற ரோட் | 10-00 | 25-00 |
| 2. | விசுவமடு ரோட்டு | 15-00 | 50-00 |

கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.


வே.கந்தசாமி,
தலைவர்,
கருநாவல்பற்றுத் தெற்கு கிராம சபை.

கி. ச. அலுவலகம்,
ஒலுமடு, மாங்குளம், 10-5-70. 2265

---


உங்கள்
புடவைகள் நிலையான
மெருகுடன் திகழ இதோ

பேயர் கசெல்லா



அக்ரமின்
லிவாபிக்ஸ்

இன்டானத்தரன்
இன்டோகாபன

BAYER
பிளாங்கோபோர்
ரெவோன்

சோலிடாடிரெல்

CASSELLA

ரெசோலின்
சீரியஸ் சுப்பா

பொலிசின்தரன்
போலமின்

உங்கள் பருத்தி, ஸிந்தெட்டிக் புடவைகளுக்கு நிலையான மெருகூட்டுவதற்காக, உலகப்பிரசித்திபெற்ற, பெயர் கசெல்லா, நிறம் மங்காத சாயப்பொருள் பசை மற்றும் சணைப்பொருள்களை வழங்குகின்றார்கள்.

உங்கள் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் நிறுவப்பட்ட எமது நவீன ஆய்வு கூடச் சேவையை பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

HAYLEYS

ஹேலிஸ் லிமிட்டெட்

400, டீன்ஸ் ரோட், கொழும்பு-10, தொலைபேசி: 96333.


---

பரவியுள்ளது.

0 0 0

## வி. பொன்னம்பலம்

(கம்யூனிஸ்ட் கட்சி)



சொல்லாலும், செயலாலும் தொழிலாளரின் தோழராக வாழுகின்றவர் திரு. வி. பொன்னம்பலம் இலங்கையின் எப்பகுதியிலும் அறியப்பட்ட தொழிற்சங்கவாதியாகவும், நல்ல பேச்சாளராகவும், மொழி பெயர்ப்பாளராகவும், விளங்குபவர் திரு. வி. பொன்னம்பலம்.

கயங்கேசன்துறைத் தொகுதியிலமைந்த அளவெட்டியைத் தாயகமாகக் கொண்ட திரு. வி. பொன்னம்பலம் அளவெட்டி அருணோதயா, ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆகியவற்றில் கற்று, பின்னர் இந்தியா சென்று படித்தவர்.

சென்னை கிறிஸ்தவக்கல்லூரியில் படித்து எம். ஏ. பட்டதாரியானவர்.

பட்டம் பெற்ற அதே வருடத்தில் சுன்னுகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் ஆசிரியராக நியமனம் பெற்றார். ஆசிரிய சேவையுடன் அரசியலிலும் ஈடுபட்டார். ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை மறுக்கப்பட்ட பின்னர் இராமநாதன்கல்லூரியில் ஆசிரியராகவும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் பதில் அதிபராகவும் கடமையாற்றினார். 1968ம் ஆண்டு ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். சேவையிலிருந்து ஓய்வுபெற்றதும் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசச் செயலாளராகக் கடமையாற்றுகிறார்.

மல்லாகம் கிராமசபையில் உறுப்பினர், உப தலைவர், தலைவர் பதவிகளை வகித்துத் தமது கிராமமான அளவெட்டியை முன்னேற்றவும் அதேபோல மற்றும் கிராமங்களையும் முன்னேற்ற உழைத்துவருகிறார்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ்.

---

...கும், கலை கலாச்சாரத்துக்கும் உரிய இடத்தைப் பெற்றுத் தருவேனென்றும் இவர் வற்புறுத்திக் கூறுகின்றார்.

0 0 0

## ரி. திருநாவுக்கரசு

(தமிழ்க் காங்கிரஸ்)

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராகிய திரு. திருநாவுக்கரசு இத்தொகுதியில் போட்டியிடும் ஏனைய வேட்பாளர்களுள் வயதில் இளைஞர்

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் முக்கிய அங்கத்தவராக விளங்கும் திரு. திருநாவுக்கரசு இப்போதுதான் முதன்முதல் காங்கேசன்துறைத் தொகுதியில் போட்டியிடுகின்றார். இலங்கைவாழ் தமிழ்மக்கள் கைத்தொழில், கமத்தொழில் வகையில் முன்னேற வேண்டுமென்ற கருத்துடைய திரு. திருநாவுக்கரசு இலங்கையில் முதன் முதலாக அலுமினியத் தொழிற்சாலையை அமைத்தவர். யாழ்ப்பாணத்திலுள்ள இவரது தொழிற்சாலையில் பலர் பணிபுரிந்து வருகின்றனர்.

காங்கேசன்துறைத் தொகுதிக்குள் அமைந்திருக்கும் அளவெட்டியே இவரது பிறப்பிடமாகும்.

சட்டக்கல்லூரியில் வழக்கறிஞராகப் பயிற்சி பெற்று வரும் திரு. திருநாவுக்கரசு சமூகப்பணிகளில் தீவிரமாகப் பங்கு கொள்ளும் இயல்புடையவர்

தமிழினம் தனது இழந்த உரிமைகளைப் பெற்று மீண்டும் சுயமரியாதையுடனும் தன்மானத்துடனும் முழு இலங்கையிலும் கௌரவத்துடன் வாழ வேண்டுமென்பதே இவரது இலட்சியங்களுள் முதன்மை பெற்றதாகும். முழு இலங்கையிலும் தமிழினம் கௌரவத்துடன் வாழக்கூடிய நிலையை உருவாக்க ஒரு தொகுதி உறுப்பினரின் கடமை மகத்தானதாக உள்ளது என்பதும் இவரது கருத்தாகும்.

சமயம், இலக்கியம், கலைகள் இவற்றிலும் அக்கறை மிக்க திருநாவுக்கரசு பல்வேறுபட்ட கலைஞர்களுக்கும் ஆதரவு தருகின்ற சுபாவமுடையவர்.

காங்கிரஸ் கட்சியின் மூலமே அரசியல் விமோசனம் காணலாம் என்ற நம்பிக்கையுடைய இவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தின் அரசியற் சுவட்டைப் பின்பற்றி வருபவர்.

---

தல் தமிழின தனிஅரசு உருவாக்குதல் ஆகியவைகளே இவரது இலட்சியங்களில்ன் முன்னிடம் வகிப்பதாகக் கூறுகின்றார்.

பௌத்த சிங்கள அகங்கார அதிகாரத்துக்குள் அகப்படாமல் முயற்சி எடுததல் கோவில்களில் வருடாந்த உற்சவங்களையும் மற்றும் உற்சவங்களையும் நடத்த வேண்டிய ஒழுங்குகள் செய்தல் ஆலயநிர்வாகிகளின் பூரணசம்மதமில்லாமல் ஆலயப்பிரவேசம் நிகழாமல் ஆவனசெய்தல் ஈழத் தமிழ் பேசும் மக்களுடன் சகல சமயத்தினரது சமயமும் சமய வழிபாட்டு முறைகளையும் பாதுகாத்தல் ஈழத் தமிழின சமுதாயத்

(4ம் பக்கம் பார்க்க)

---

## தற்காலிக வேலை மேற்பார்வையாளர் பதவி

### மத்திய சந்தை நிர்மாண வேலை

யாழ்ப்பாணம்

மேற்குறிப்பிட்டபதவிக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(2) விண்ணப்பதாரிகள் பௌதிகம் அல்லது கணிதம் பாடத்தில் சித்தி பெற்று ஜீ.சீ.ஈ.(சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். இத்துடன் இலங்கையின் எந்த் தொழில் நுட்பக் கல்லூரியிலாவது கட்டிட நிர்மாணப் பாடத்தில் 3வருட பயிற்சி பெற்றிருக்க வேண்டும். ஸ்திரமான கொங்கிறீற் வேலைகளிலும், கட்டிட வேலைகளிலும் 2 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(3) நியமனம் முற்றுகத் தற்காலிகமானதாகும். நியமிக்கப்பட்டவரின் சேவை தேவையில்லா விடில் ஒரு மாத (நோட்டீஸ்) அறிவித்தலில் நிறுத்தப்படலாம்.

(4) மாதச் சம்பளம் எல்லாப்படிகளுமுட்பட ரூபா 250/- வேறு எந்தப் படிகளும் வழங்கப்பட மாட்டா.

(5) தகைமைகளும் அனுபவமும் குறிப்பிட்டு விண்ணப்பங்கள் தராதரப்பத்திரங்களின் நகல்களது இணைப்போடு யாழ். மாநகர சபையாணையாளருக்கு விலாசமிடப்பட்டு 19-5-1970-ம் திகதி யன்றே அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு அனுப்பிவைக்கவேண்டும்.

ஏ.ரி சுந்தரம்
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

மாநகரசபை காரியாலயம்
மாநகரசபை,
யாழ்ப்பாணம்
9-5-1970 2266

---


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஷம்மிகபூர் ராஜ்ஸ்ரீ நடித்த

பிரமச்சாரி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

5வது வாரம்

சிவாஜி, கே ஆர் விஜயா நடித்த

திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம்

5வது வாரம்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி மற்றும் பலர் நடித்த

தங்கச் சுரங்கம்

(முழுநீளச ...ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 90.வது தினம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார் மற்றும் பலர் நடித்த

தில்லானா மோகனம்பாள்

வெற்றிகரமான 3வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு)

பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்

இன்னும் பலர் நடித்த

பி. நாகிரெட்டி அளிக்கும்

நம் நாடு

(ஈஸ்ட்மென் கலர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்ட் வசமிருந்த 2 கிராமங்கள் வீழ்ச்சி

## யு.எஸ். - தென் வியட்னும் படைகளின் உக்கிரமான போர்

நாம்பென்,மே.11

கம்யூனிஸ்ட் துருப்புக்களிடமிருந்த 2 கிராமங்களை கம்போடியா, தென் வியட்னும் துருப்புக்கள் மீட்டுக்கொண்டுள்ளனர். இருதரப்புக்களும் சேர்ந்து மீக்கொங் நதிக்கு மேற்கே 10 கில்லோ மீட்டர்தூரத்திலுள்ள கிராமம் ஒன்றை நேற்றுக் கைப்பற்றினர். அதே வேளையில் வியட்காங் துருப்புக்களும் கடும் தாக்குதல்களை எதிர் நோக்கியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

கம்போடிய துருப்புக்களும் தென்வியட்னும் துருப்புக்களும் கைப்பறறிக்கொண்ட 2வது கிராமம் மீக்கொங்குக்கு அண்மையில் உள்ளது. நேற்றுமுன்தினம் நாம்பெனுக்குக் கிழக்கே 45கில்லோ மீட்டர் தூரத்திலுள்ள சோகிடாம் என்றஇடத்தை கம்போடியத் துருப்புக்கள் வியட்காங் வசமிருந்து கைப்பற்றினர். 24 மணிநேர கடும்போரின் பின்னர் இச்சிறிய நகரம் மீட்கப்பட்டது.

அமெரிக்கா கூறுகிறது

## 4000வியட் காங்கியர் கொல்லப்பட்டனர்

நேற்று நடைபெற்ற கடும் போரில் 4000க்கும் அதிகமான வியட்காங் துருப்புக்கள் கொல்லப்பட்டதாக சைகோனில் உள்ள அமெரிக்க தூதுவராலயம் கூறியது 64 அமெரிக்கத் துருப்புக்களும் 263 தென்வியட்னும் துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும், 253 அமெரிக்க துருப்புக்களுக்கும் 1225 தென்வியட்னும் துருப்புக்களுக்கும் காயம் ஏற்பட்டதாகவும் சைகோன் தூதுவராலயம் மேலும் கூறியது

மீக்கொங்குக்கு அருகே உள்ள துறைமுகம் ஒன்றை கைப்பற்றிக் கொண்ட தென் வியட்னும் துருப்புக்கள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிறுர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

### சிரியாஉறவை முறித்தது

பீக்கிங்கில் இருந்து கொண்டு போட்டி அரசை அமைத்துள்ள இளவரசர் சிஹானுக்கின் புதிய அரசை சிரியா ஏற்றுக் கொண்டுள்ளதால் சிரியாவில் உள்ளகம்போடிய தூதுவராலயத்தை கம்போடியா மூடிவிட்டது. சிரியாவும் தனது தூதுவரைநொம்பனிலிருந்து திருப்பியழைத்துவிட்டது.

### ஐ.நா.உதவிக்கு அழைப்பு

ஐ.நா.வின் உதவியை கம்போடியா கோரியுள்ளது. கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக இராணுவ பொருளாதார உதவிவழங்குமாறு கம்போ

### முதலமைச்சர் தலைமையில் திருமணங்கள்

சென்னை,மே11

சினிமாஅதிபர் ஏ.வி.மெய்யப்பச்செட்டியாரின் மகன் திரு பாலசுப்பிரமணியனின் திருமணம் நேற்று சென்னையில்நடைபெற்றது அதே மேடையில் 21தொழிலாளர்களுக்கும் திரு.ஏ.வி. மெய்யப்பச் செட்டியார் திருமணம்செய்துவைத்தார் முதலமைச்சர் திரு.மு. கருணநிதி தலைமையில் இத்திருமணங்கள் நடைபெற்றன.

### எஸ். ஜே. வி,யை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் தூது கோஷ்டி ஒன்று எஸ் ஆர் எஸ் தேவதாசன் தலைமையில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகத்தைச் சந்தித்துபட்டதாரிகள், மாணவ ஆசிரியர் நியமனம் பற்றிப் பேசினர். சிங்களப் பட்டதாரிகளுக்கும் தமிழ்ப்பட்டதாரிகளுக்கும் தொகுதிவாரியாக வழங்கும் நியமனத்தை பாகுபாடின்றி கொடுப்பதற்கு ஆவனசெய்யும்படி இவர்கள் வற்புறுத்தினர்.

### மதுரையில் பனிக்கட்டிமழை

மதுரை,மே 11

கடந்த இரு தினங்களாக கனத்தமழையை அடுத்து மதுரையில்பனிக்கட்டிமழை பெய்தது. மழையுடன்கடுங்காற்றும்வீசியதால் கோவில்கள், சினிமாக் கொட்டகைகள் தரைமட்டமாயின.

மதுரையை அடுத்து அவனியாபுரம், ஐயனுர்புரம் ஆகிய இடங்களில் சூறைக்காற்றினுல் பலத்த சேதம் ஏற்பட்டது:

திருநகரை அடுத்த தங்கன் குளத்தில் சிவன்கோவிலருகே சுமார் 200 ஆண்டுகளாக ஓங்கி நின்ற ஆலமரம் வேரோடுசாய்ந்ததினுல் கோவில் மண்டபம் இடிந்து விழுந்தது.

### நக்சல்பாரிகள் தொல்லைகளை தீர்ப்பது எப்படி?

உதகை, மே 11

நக்ஸல்பாரிகளின்அபாயம் பற்றி ஆராய்வதற்காக 4 ராஜ்யங்களின் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல்கள் ஒருமகாநாட்டை கூட்டி ஆராய்ந்தனர்.

தென்மண்டல பொலிஸ் படையை அதிக அளவு பயன்படுத்தி ஒருங்கிணைந்த அடிப்படையில் இப்பிரச்னையைத் தீர்க்க வண்டுமென விவாதித்தனர். தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, மைசூர் ஆகிய ராஜ்யங்களில் தமிழ்நாட்டிலேயே நக்சல்பாரிகளின் பிரச்னை குறைவாகயிருப்பதாக மாகாநாட்டில் பேசப்பட்டது.

### 21 அமெரிக்கர் பலி

வாஷிங்டன், மே 11

வியட்னுமில் இன்று நடைபெற்ற கடும் தாக்குதலின் போது 6 வியட்காங் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன் [illegible] கர்கள் [illegible] என்றும் அறிவிக்கப்பட்டது.

### அனல்காற்று: 17 பேர் பலி

புதுடில்லி, மே 15

பீகார் மாநிலத்தில் 17 பேர் வெய்யிலின் கொடுமைக்கு பலியாகியுள்ளார்கள்.

கடந்த பலதினங்களாக கடும் வெய்யில் எறித்துக் கொண்டிருக்கின்றது. இதனுல் குளம், கிணறு ஆகியனவும் வற்றிவிட்டன. அனல்காற்று கொடூரமாக வீசிக் கொண்டிருக்கின்றது.

இதனுல் பீகார் மாநிலத்தில்உள்ள ஜன்பாத் வட்டாரத்தில் 12 குழந்தைகளும், 5பெண்களும் மயங்கி விழுந்து உயிர்துறந்தார்கள் பலநூற்றுக்கணக்கான கால்நடைகளும் இறந்துள்ளன.

### கரம்பொன் அபிவிருத்திக் கழகம்

கோட்டை, திங்கள்

''மக்களிடையே செல்வந்தராயினும் சரி ஏழையாயினும்சரி அவரவர் உள்ளத்தில் குறைபாடுகளுடனேயே வாழ்கின்றனர். மக்கள் இன்பமாக வாழ வேண்டுமாயின் நாம் ஐக்கியத்தை வளர்க்க வேண்டும். இதற்கெல்லாம் உறுதுணையாய் அமைவது இப்பேர்ப்பட்ட கழகங்களே நமது கிராமமும் கிராம மக்களும் முன்னேற வேண்டுமாயின் இளைஞர்களின் ஒற்றுமையும் முயற்சியுமே வேண்டும். இதையே காந்திஜி, விநோபாஜி போன்ற பெரியோர்கள் நமக்குச் செயல்மூலம் காட்டியுள்ளனர்'' என கொழும்பு கொம்பனித் தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெற்ற தென்கரம் பொன் அபிவிருத்திக் கழக அங்குரார்ப்பண விழாவில் உரையாற்றிய கழகத் துணைத் தலைவர் திரு. வே. ச. சுப்பையா கூறினுர்.

கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. நா. வே.கனகசபை பேசுகையில் 'தனிப்பட்டோரின் முயற்சியிலும் கூட்டுறவின் செயலாக்கம் பயன்மிக்கது. தாழ்வுற்ற எமது சமூகத்திற்கு ஒரு செயலூக்கி தேவைப்படுகின்றது. அதுவே தென் கரம் பொன் அபிவிருத்திக் கழகமாய் பரிணமித்துள்ளது'' என்றுர்.

கீழ்க்கண்டோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: காப்பாளர்: திரு. நா. மு. சரவணமுத்து, தலைவர்: திரு. நா. வே. கனகசபை, உபதலைவர்கள்: திரு. வே. ச. சுப்பையா, திரு. க. செல்வரத்தினம்,

## கட்சி விலகிய மந்திரிக்கு செருப்புத்துடைக்கும் தண்டனை

அமிர்தசரஸ், மே 11

அகாலி தளத்திலிருந்து பிரிந்து, பஞ்சாப்பில் லட்சுமண்சிங்கில் மந்திரிசபையில் சேருவதற்காக சென்ற முன்னுள் மந்திரி கர்னுயில் ஸிங்முராகரிக்கு அகாலித் தளம் தண்டனை விதித்துள்ளது.

சீக்கிய மத விதிகளின்படி அவருக்குத்தண்டனை அளிக்கப்பட்டது.

சீக்கிய குருத்துவாரத்தி சமையல் பாத்திரங்களை ஒரு நாளைக்குத் தேய்த்துக்கழுவ வேண்டும். இன்னெரு நாளுக்கு குருத்துவாரத்துக்கு வருவோரின் பாதரட்சைகளைத் துடைக்க வேண்டும் என்ற அகாலி தளப் பிரதமகுரு நேற்று உத்தரவிட்டார்.

### அசம்பாவிதம் இல்லை

கொடிகாமம், திங்கள

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. என். கதிர்காமநாதன் தேர்தல் கூட்டங்களை நன்கு கண்காணித்து, கூட்டம் நடைபெறும் இடத்துக்கு அண்மையிலுள்ள குச்சு ஒழுங்கைகள், காணிகள் முதலியவற்றை சுற்றி ஆராய்ந்து, கூட்டத்தில் எவ்வித அசம்பாவிதங்களோ அல்லது தொந்தரவுகளோ ஏற்படாமல் அவதானித்துவருகிறுர் இதனுல் இங்கு அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

### நிதிக்குழு

வேலணை, திங்கள்

வேலணை முருகன் ஆலயத் திருப்பணி வேலைகளை முடிப்பதற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு வேலணைக் கிராமச்சபைத்தலைவர் திரு. க. சதாசிவம் தலைமையில் திருவாளர்கள் மு. சி. சிற்றம்பலம், சு சிவரெத்தினம், நா. நாகலிங்கம் ஆகியோர்களைக்கொண்டசெயற் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

மக்கள் குழுக்களால்

### முதலாளிகள் பாதிக்கப்படுவர்

கிரிஎல, திங்கள்

'எதிர்வரும் பொதுத் தேர்தலில் நாங்கள் பதவிக்கு வந்ததால்'மக்கள் குழுக்கள்' மூலம் நாட்டையாளுவோம்.இந்த குழுக்கள் நாட்டின் ஜனநாயகத்துக்கு ஒரு பொழுதும் பங்கம் விளைக்காது. மக்கள் இக் குழுக்களை தெரிவுசெய்யும் உரிமை மக்களுக்கே உரியது. ஆனுல் இக் குழுக்களால் முதலாளிகள் பெரிதும் பாதிக்கப்படுவர்'.

கிரிஎலவில் நடைபெற்ற சுதந்திரக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய கட்சிக் காரியதரிசி திரு ரி பி. சுபசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூட்டணி மக்கள் குழுச்கள்மூலம் நாட்டை ஆள்வதற்கு விரும்புவது மக்களுக்கு நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய

### 'அண்ணுதுரையைதமிழரசார் பின்பற்ற வேண்டும்'



உடுவில், திங்கள

''தமிழ் அரசு என்ருல் அதற்கென ஓர் தலைவன், அதற்கென ஒரு அதிகாரம், தங்களைத் தாங்களே ஆளும் உரிமை இருக்க வேண்டும் இதுதான் தமிழ் அரசு' சமஷ்டிவாதிகள் கோருவது தமிழ் அரசு அல்ல. தமிழரசு கோருபவர் திரு. சி. சுந்தரலிங்கம் ஒருவர்தான். தமிழரசு இலங்கையில் ஒரு போதும் ஏற்படமாட்டாது தனித்தமிழ்நாடு கோரிக்கையை திரு. சி. என் அண்ணுதுரை கைவிட்டது போல தமிழ் மக்களின் நன்மை கருதி தமிழரசுக் கட்சியினரும் 'தமிழ் அரசு' என்ற சொல்லைக் கைவிட வேண்டும்.''

சங்குவேலி வெட்டுக்கட்டைப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய உடுவில் தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் திரு. என் சிவநேசன் மேற்கண்டவாறு கூறினுர்.

திரு. வே மயில்வாகனம் இக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. சிவநேசன் மேலும் பேசுகையில் ''ஒரு மத்திய அரசின் கீழ் இயங்கும் ஒற்றுமைப்பட்ட ஒரு தமிழ் ராஜ்யம் தான் நன்மைதரும் என உணர்ந்த அண்ணுதுரை தனித்தமிழ்நாடு கோரிக்கையை கைவிட்டார், இன்றைய முதலமைச்சர் திரு. மு, கருணநிதியும் கூட அதையே கைக்கொள்கிறுர், எதற்கும் தமிழகத்தையும், அண்ணுதுரையையும் முன்மாதிரியாக எடுக்கும் சமஷ்டிக் கட்சியினர் தமது தமிழரசுக் கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்றுர்.''

திரு. மோதிலால் நேரு பேசுகையில் ''கல்லோயா குடியேற்றத்திற்குக் காரணம் காங்கிரஸ்காரர்தான் என சமஷ்டி வாதிகள் கூறுகின்றனர். குடியேற்றம் நடந்த காலத்தில் கிழக்கு மாகாணம் முழுதும் பிரதிநிதித்துவம் வகித்தவர்கள். சமஷ்டிவாதிகளே'' என்றுர்

### தற்கொலை

யாழ்ப்பாணம், செவ்.

கோண்டாவிலைச் சேர்ந்த முருகன் ஐயன் என்பவர் கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டார். மகளின் திருமணம் பற்றி எழுந்த தகராறே இதற்குக் காரணம் என மரணவிசாரணையில் தெரிய வந்தது.

ஐயனுக்கு சொந்தமான பூட்டப்பட்ட வீட்டில் அவர் இறந்துகிடக்கக் காணப்பட்டார். அவர் அருகே கிருமிநாசினி வெற்று போத்தலும், கடிதம் ஒன்றும் இருப்பதை கண்டு பொலிஸார் எடுத்தனர்

## தேர்தல் போட்டி-1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள துறைமுகம் ஒன்றை கைப்பற்றிக் கொண்டதென் வியட்னும் துருப்புக்கள் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருக்கிருர்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

### அமெரிக்காவின் நோக்கம்

இன்னும் 10 மாதங்களுக்குத் தாக்குப்பிடிக்கவேண்டும், அதற்குள் தென்வியட்னும்படைகளுக்கு போரில் ஈடுபடுவதற்கான பயிற்சி அளித்துவிடலாம் என்று அமெரிகக ஜனதிபதியின் தகவல் அதிகாரி கூறினுர் கம்போடியா உள்விவகாரங்களில் குறுக்கிடுவது அமெரிக்காவின் நோக்கமல்ல, வியட்னும் போரைப் பாதிக்கும்வகையில் கம்போடியாவிலுள்ள படைத்தளங்களை அழிப்பதுதான் அமெரிககாவின் நோககம் என்று அமெரிக்கா ராஜாங்க அமைச்சு கூறியுள்ளது.

### ஐ.நா. உதவிக்கு அழைப்பு

ஐ.நா.வின் உதவியை கம்போடியா கோரியுள்ளது. கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக இராணுவ பொருளாதார உதவிவழங்குமாறு கம்போடிய புதிய அரசு ஐ. நா. பொதுக்காரியதரிசி யுதாண்டிடம் கேட்டுள்ளது. இதன் கோரிற்கையை யுதாண்ட் ஐ. நா சபையின் 126 அங்கத்துவ நாடுகளுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

கம்போடிய அரசாங்கம் ஐ. நா வின் உதவியைக் கோரிக் கொண்டிருக்கும் வேளையில் தென்வியட்னும் கடற்படை அணியொன்று தென் வியட்னுமிலிருந்துகம்போடிய தலைநகரான நாம் பெனுக்குவிரைந்துகொண்டிருக்கிறது, இவற்றுடன் அமெரிக்க போர்க்கப்பல்களும் செல்கின்றன.

அமெரிக்காவின் கம்போடியத் தலையீட்டிற்கு நாம் பென் மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவிப்பதாக பீக்கிங்கிலுள்ள இளவரசர் சிகானுக் பீக்கிங் வானெலியில் ...

சிங்களப் பட்டதாரிகளுக்கும் தமிழ்ப்பட்டதாரிகளுக்கும் தொகுதிவாரியாக வழங்கும் நியமனத்தை பாகுபாடின்றி கொடுப்பதற்கு ஆவனசெய்யும்படி இவர்கள் வற்புறுத்தினர்.

### விபத்தினுல் மரணம்

யாழ்ப்பாணம், செவ்

அரியாலையைச்சேர்ந்தசிவஞானம் செல்வரத்தினம் என்ற(24வயது) வாலிபர் கிணற்றில் தவறிவிழுந்து நீரில்மூழ்கி மரணமானுர்

மரணவிசாரணை அதிகாரி திரு என். இராசநாயகம், விசாரணையின்பின் விபத்தினுல் ஏற்பட்டமரணமென்று தீர்ப்பளித்தார்.

கூறினுர்' சிகானுக்கு ஆதரவு அரசாங்ரத்தின் புதிய பிரதமரும் இதே போன்று செய்தி ஒன்றை அமெரிக்க ஜனதிபதியின் திட்டத்தை எதிர்த்து நிற்கும் அமெரிக்க செனட்டர் ஒருவருக்குதந்தியில்அனுப்பி வைத்துள்ளார்.

வியட்னுமில் இன்று நடைபெற்ற கடும் தாக்குதலின் போது 6 வியட்காங் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன் என்றும் 21 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

### 'கீரிமலையினிலே' அறிமுக விழா

மல்லாம், திங்கள்

கவிஞர் வி. கந்தவனம் எழுதிய 'கீரிமலேயினியே' என்றகாவிய நூலின் அறிமுக விழா செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு நுணுவில் மேற்கு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் ஆசிரியர் திரு. ஆ. செல்லையா தலைமையில்நடைபெறவிருக்கின்றது.

கவிஞர் வே. ஐயாத்துரையின் தமிழ் வாழ்த்துடன் ஆரம்பமாகும் விழாவில் ரசிகமணி கனக, செந்திநான், வித்துவான் மு. சபாரத்தினம், கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, பண்டிதர் ச. பொன்னுத்துரை, ஆகியோர் நூலின்ஆய்வுரை வழங்குவர். சாவகச்சேரி பட்டினசபை உபதலைவர் திரு. பொ ஜெயரத்தினம், சாவகச்சேரி முன்னுள் எம். பி. திரு, வி. என். நவரத்தினம், ஆசிரியர் கா. கந்தையா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றுவர் விழா இறுதியில் ''கீரிமலையினிலே'' என்ற தலைப்பில் நுணுவில் வீரபத்திரர் இளந்திரையன் மன்றத்தினர் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி நடாத்துவர்.

கீழ்க்கண்டோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: காப்பாளர்: திரு. நா. மு. சரவணமுத்து, தலைவர்: திரு. நா. வே. கனகசபை, உபதலைவாகள்: திரு. வே. ச. சுப்பையா, திரு. க. செல்வரத்தினம், செயலாளா: திரு. க. இராமசந்திரன், பொருளாளர்: திரு. க, இரத்தினசபாபதி, உபபொருளாளர்: திரு. த. தியாகராசா.

நிர்வாக சபை அங்கத்தவர்களாக திருவாளர்கள்: வி. திருநீலகண்டன், ம. நவரெத்தினம், செ. சர்வானந்தன் சி. சுந்தரமூர்த்தி, கு கஜேந்திரன், சி. மகேந்திரன், வி. மகாதேவா. கணக்குப் பரிசேதகர்: க. சுந்தரேசன்.

### வேலணை ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

வேலணை மேற்கு மகா கணபதிப்பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் நேற்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது. இம் மாதம் 19-ம் திகதி தேர்த் திருவிழாவும், 20-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். ......

### தற்காலிக நீதிபதி

யாழ்ப்பாணம், செவ்.

திரு. கனகரத்தினம் நேற்றுக் தொடக்கம் 13-ம் திகதி வரை தற்காலிக யாழ். மாவட்ட நீதிபதியாகவும், மாஜிஸ்திரேட்டாகவும் கடமையாற்றுகிருர்.

திரு ரி பி. சுபசிங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூட்டணி மக்கள் குழுக்கள்மூலம் நாட்டை ஆள்வதற்கு விரும்புவது மக்களுக்கு நாட்டின் நிர்வாகத்தில் முக்கிய பங்கு அளிப்பதற்கேயாகும், 'மக்கள் குழுக்களின் மூலம் மக்களுக்கு அரசாங்கத்துடன் நேரடித் தொடர்பு ஏற்படும். அது மட்டுமன்றி அவர்கள் தேவையான யாவற்றிற்கும் அரசாங்கத்தை நம்பியிருக்கத் தேவையில்லை' எனக் குறிப்பிட்டார்.

### கலைஞர்களைப் பேணவேண்டும்

யாழ்ப்பாணம், செவ்.

மும்மூர்த்தி இசை மன்றத்தினரால் திருநெல்வேலி சிவன் கோயிலுக்கண்மையில் நடாத்தப்படும் இசைவிழாவின் முதல்நாள் நிகழ்ச்சி உதவி மேயர் திரு துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது. திரு துரைராஜசிங்கம் பேசுகையில், இசைவல்லுனர்களை நாம் பேணிப்பாதுகாக்க வேண்டும். கலைஞர்கள் அரிய பொக்கிஷங்கள் ஆகும். அவர்களை நாம் தகுந்தமுறையில் பேணுவதுடன் நின்றுவிடாது உதவியும் செய்ய வேண்டும். மேலைநாடுகளில் கலைஞர்களுக்கு மிகஉயர்ந்த மதிப்பு கொடுக்கப்படுகின்றது. ஆனுல் இங்கும் அந்த நிலை ஏற்படவேண்டும்' என்ருர்.

அணைணுதுரையையும் முன மாதிரியாக எடுக்கும் சமஷ் ...

... ப்பதை கண்டு பொலிஸார் எடுத்தனர்

# தேர்தல் போட்டி-1970

இலங்கையில் 7-வது ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான பொதுத்தேர்தல் இம்மாதம் 27-ம் திகதியன்று நடைபெறவிருப்பது வாசகர்கள் அறிந்ததே. அதையொட்டி 'ஈழநாடு' ஒரு போட்டி நடாத்த ஏற்பாடு செய்திருக்கின்றது. அரசியற் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களைச் சரியாகக் குறிப்பிடும் வாசகருக்கு முதலாம் பரிசும் ஏறத்தாழ சரியான விடையனுப்பும் வாசகருக்கு 2-ம் பரிசும் அதற்கடுத்த படியான சரியான விடைக்கு 3-ம் பரிசும் வழங்கப்படும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புகின்றவர்கள் எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகளும் சுயேச்சை வேட்பாளர்களும் பெறும் ஆசனங்களை இங்கே பிரசுரமாகும் கூப்பனில் உரிய இடத்தில் எழுதி ''தேர்தல் போட்டி - 1970'' ஈழநாடு, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 26-5-70 க்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திய கூப்பன்கள் எக்காரணங்களைக் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

ஒருவர் எத்தனை கூப்பன் வேண்டுமானுலும் அனுப்பலாம். நேரே கொடுக்க விரும்புவோர் ''ஈழநாடு'' அலுவலகத் தபால் பெட்டியில் சேர்க்கவும்.

கேள்விகள்:

1. இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வடக்கு -கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
2. அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் கட்சிக்கு வடக்கு கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
3. ஐக்கிய தேசியக் கட்சிக்கு வடக்கு — கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.
4. கூட்டணிக்கட்சிக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்

கூட்டணிக் கட்சியுள் அடங்குவன:

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ-பீக்கிங்), லங்கா சமசமாஜக் கட்சி என்பன.

5. சுயேட்சையாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் எத்தனை தொகுதிகளில் வெற்றி கிடைக்கும்.

சுயேச்சைகளுள் அடங்குவன:

தமிழர் சுயாட்சிக் கழகம், இலங்கைத்தமிழர் ஒற்றுமை முன்னணி, சிங்கள கமாஜனக் கட்சி, இ. தி,. க.மு கட்சி என்பன.

**பரிசு விபரங்கள் விரைவில் வெளிவரும்**

**'ஈழநாடு' ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.**

## 1970 தேர்தல் போட்டிக் ''கூப்பன்''

## 'ஈழநாடு'

| | |
|---|---|
| இ. த. அ. கட்சி | |
| அ. இ. த. கா. கட்சி | |
| ஐ. தே. கட்சி | |
| கூ. கட்சி | |
| சுயேச்சை | |

பெயர் : ..........................................................

விலாசம் : ..........................................................

..........................................................

# சிறுபான்மைத் தமிழருக்காக தமிழரசார் சாதித்தவை என்ன?

## சுதுமலை கூட்டத்தில் விளக்கம்

தாவடி, திங்கள

'எந்தவொரு அரசியல் கட்சியும் பாடுபடாத அளவில், எமது தமிழரசுக் கட்சி தாழ்த்தப்பட்ட மக்களின் ஏற்றத்தாழ்வுகளை ஒழிப்பதற்காகப் பாடுபட்டுள்ளது. தமிழரசுக் கட்சி எடுத்த நடவடிக்கையின் பலனுகத்தான் செல்வச்சந்நிதி மட்டுவில் போன்ற ஆலயங்கள் சிறுபான்மைத்தமிழ்மக்களுக்காகத் திறந்துவிடப்பட்டன. ஆலயப் பிரவேசம் சம்பந்தப்பட்ட பல வழக்குகளில் சிறுபான்மைத்தமிழர் சார்பில் திரு. சி. கதிரவேற்பிள்ளை, திரு. ஆலாலசுந்தரம் ஆகியோர் பெரிதும் உதவியுள்ளார்கள்.

இவ்வாறு, சுதுமலை தெற்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றுகையில் உடுவில் தொகுதி முன்னுள் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு.வி தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. இரத்தினத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு. தருமலிங்கம் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது -

சிறுபான்மைத் தமிழாகளும் அங்கத்துவம் வகிக்கக்கூடிய முறையிலே உள்ளூராட்சி மன்றங்களை ஆக்கி வைத்த பெருமைதமிழரசுக் கட்சியையே சாரும். சிறுபான்மைத் தமிழர்களுக்காக 2லட்சம் ரூபா செலவில் ஒவ்வொருதொகுதியிலும்காணிகள் வழங்கி வசிக்க வசதி செய்துள்ளது தமிழரசுக் கட்சி வேறு எந்தக் கட்சியாவது இதுவிடயமாக ஏதாவது செய்ததா?

1956ம் ஆண்டிலே, அமரர் வன்னியசிங்கம் இராஜவரோதயம் ஆகியோரால் பாராளுமன்றத்திலே சாதி ஒழிப்புச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இன்று செயல்படுகின்றது

### சமத்துவமாக வாழவேண்டும்

முன்னுள் கோப்பாய் எம்பி திரு சி. கதிரவேலுப்பிள்ளை பேசும் போது சமத்துவமாக, சுயமரியாதையுடன் வாழ விரும்பினுல் தமிழரசுக்கட்சியை ஆதரியுங்கள். தமிழ் மக்கள் எல்லாரும் சமஉரிமைபெற்றவர்களாக வாழவேண்டும் என்ற ஒரே நோக்குடன் இயங்கும் கட்சி தமிழரசுக்கட்சியே என்ருர்.

### சாதிகளை ஒழிக்க...

சாதியை ஒழிக்க இடதுசாரிகள் 20 வருடங்களாக முயன்ருர்கள். புரட்சிக்குப் பட்டாளங்கள் சேர்த்தார்கள், சாதிகளை மோதவிட்டார்கள். 1956ல் சென்ற தமிழரசுக் கட்சி 1957ல் சமூக குறைபாடு விலக்குச் சட்டத்தை செயல்படுத்தியது, இதனுல் சிறுபான்மை தமிழர்களுக்கு சுயமரியாதையையும், சமத்துவத்தையும் அளித்தது என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

### எதுவேண்டும்

தாய்மொழிக்கின்னல் வந்தால் தமிழினமே அழிந்துவிடும். தமிழ்மக்களே! அடிமைகளாக வாழப்போகிறீர்களா? அல்லது சுதந்திரமாக வாழ விரும்புகிறீர்களா? சுதந்திரமாக வாழ விரும்பின், அடிமையாக வாழ விரும்பாத தமிழரின் விடுதலை இயக்கமான தமிழரசு கட்சியை ஆதரியுங்கள் என்ருர் முன்னுள் நல்லூர்த் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. இ.மு. வி. நாகநாதன்,

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. ச, முத்துலிங்கம், மானிப்பாய் கிராமசபைத்தலைவர் திரு. சி. மார்க்கண்டு, திரு. செ. பத்மநாதன் திரு. பொன்னம்பலம் உட்படப்பலர் இக் கூட்டத்தில் உரையாற்றினர்.

# அமைதியை நிலை நாட்ட இஸ்ரேல் தயாராம்

## 22-வது ஆண்டு விழாவில் வெளியுறவு மந்திரி அறிவிப்பு

டெல்அவிவ், மே 11

மேற்கு ஆசியாவில் அமைதியை நிலைநாட்டுவதற்காக அரபு-இஸ்ரேல் யுத்தத்தை நிறுத்துவதற்கு இஸ்ரேல் தயாராகஇருப்பதாக இன்று இஸ்ரேல் வெளியுறவு மந்திரி எபான் அறிவித்தார்.

இஸ்ரேல் அமைக்கப்பட்டு 22-வது ஆண்டு விழா இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு வெளியுறவு மந்திரி, நாட்டு மக்களுக்கு வானெலியில் உரைநிகழ்த்தினுர் நாட்டின் அமைதிக்காக போரை நிறுத்தவும் தயாராக இருப்பதாக அவர் வானெலியில் கூறினுர்.

அத்துடன் 1967-ம் ஆண்டில் ஐக்கிய அரபுக்குடியரசிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஜாடின் என்ற இடத்தையும் விட்டுக்கொடுக்க இஸ்ரேல் தயாராகஇருப்பதாக அவர் தமது உரையில் குறிப்பிட்டார்.

22-வது ஆண்டுப் பூர்த்தி விழா கொண்டாடும்போது எதுவித அசம்பாவித நிகழ்ச்சிகளும் இடம்பெருதவாறு பந்தோபஸ்து நடவடிக்கைகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன. பிரதமர் திருமதி கோல்டா மெயர் நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில், நாட்டு மக்களின் அமைதிக்காக போரை நிறுத்தத்தாம் தயாராகஇருப்பதாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

ஆவலோடு மிக அதிகமாக நாம் எதிர்பார்ப்பவை அனைத்தும் சந்தோஷத்தின் எதிரிகள்,

—ராபர்ட் லிண்ட்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 29-ந் திகதி (12-5-70)


## ஒரு பெரிய கவலை

கச்சேரி முறையை நீக்கிவிட்டு அதற்குப்பதில் மக்கள் குழுக்களை ஏற்படுத்தப்போவதாக கூட்டுக் கட்சியினர்தங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்துள்ளது. சில வட்டாரங்களில் அதிக கவலையையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது, இது சர்வாதிகார ஆட்சிக்கு அடிகோலுவதாக இருக்குமென்று பிரதம மந்திரியும் கண்டித்திருக்கிறார்.

ஆனால் அந்நிய ஆட்சியினர் இங்கு ஏற்படுத்திய கச்சேரி முறை உளுத்துப் போனதென்றும் அதை மாற்றி ஆங்காங்கேயுள்ள மக்கள் தங்களுக்கு தேவையானவற்றை நிறைவேற்றிக் கொள்ள அதிகாரம் பெற வேண்டுமென்றும் பொதுமக்களிடையே கருத்து பரவியுள்ளது. மாவட்டசபை, பிரதேசசபை கோரிக்கைகளெல்லாம் இந்த அடிப்படையில் தான் கேட்கப்பட்டன, துரதிருஷ்ட வசமாக அவை நிறைவேற்றப்படவில்லை கூட்டணி ஆட்சியோ தேசிய அரசாங்கமோ இதை அமுலுக்கு கொணர்ந்து கச்சேரி முறையை ஒழித்திருந்தால் தமிழ்ப்பகுதி மட்டுமல்லநாட்டின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள மக்களும் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யக்கூடிய வாய்ப்பு கிடைத்திருக்கும்.

தெரிவு செய்யப்பட்ட ஊழியர் மன்றங்கள், அரசாங்க அலுவலகங்களிலே ஆலோசனை மன்றங்கள் பிரதேச அடிப்படையில் மக்கள் குழுக்கள் ஆகியவற்றை உருவாக்குவதன் மூலம் தற்போதைய ஆட்சி முறையை ஜனநாயக ரீதியானதாக்கி மக்களோடு நெருங்கிய தொடர்புகொள்ளச் செய்வோம் என்று கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறதெனினும் இதைப்பற்றிய விவரங்கள் தரப்படவில்லை. அக்கட்சிஅதிகாரத்துக்கு வந்தால், தங்கள் கட்சியின்தேர்தல் குழுக்களே மக்கள் குழுக்களாக மாற்றப்பட்டு அவற்றினிடமே பிரதேச ஆட்சி அதிகாரம் கையளிக்கப்படலாமென்று ஓர் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. இதில் ஏதும் உண்மையிருப்பின் இது குறித்து பொதுமக்கள் அஞ்சுவதற்கு அதிக இடமுண்டு.

ஒரு கட்சியினரே அடங்கியதாக மக்கள் குழுக்கள் இருப்பின் மற்றக் கட்சியினருக்கு நீதி நியாயம் கிடைக்காது போவதுடன் அக்குழுவைச் சேர்ந்தவர்கள் தங்களது சொந்த வஞ்சங்களைத் தீர்த்துக் கொள்ளவும் முயலக்கூடும். அக் கட்சியைச் சேராத பொதுமக்கள் நிம்மதியசக வாழமுடியுமா என்பதும் சந்தேகம், ஜனநாயக தர்மத்துக்கும் அதுமாறுகும். ஆனல் கூட்டுக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் ஜனநாயக ரீதியிலேயே இந்த மாற்றம் இருக்கும என்று கூறியிருப்பதால் தேர்தல் மூலமே மக்கள் குழுக்களுக்கு அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவரென்பதே அக் கட்சியின் கருத்தாகுமென்றுகொள்ளலாம்

எப்படியும் இதுமிகமுக்கியமான விஷயம பிரதம மந்திரியும் இதைப்பற்றி அச்சம் தெரிவித்திருப்பதால் கூட்டுக் கட்சியின் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா இவ் விஷயத்தை தெளிவாக விளக்கி பொதுமக்களிடையே உள்ள இவ்வித அச்சத்தை உடன் நீக்குவாரென்றே நம்புகிறோம். தேர்தல் முறையிலும் பல குறைகள் உள்ளன தான் என்றாலும் அக்குறைகளைக் கூடுமானவரை நீக்க தக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமேயன்றி தேர்தல் முறையையே கைவிடுவதாயின் அது ஜனநாயகத்தைப் பலப்படுத்த உதவாததுடன் சர்வாதிகார ஆட்சிக்கே அடிகோலுவதாகும்.

## கம்போடியா

# உயிர்த் தியாகம் செய்ய தயாராக இருக்க வேண்டும்

**[காங்கேசன்துறைத் தொகுதியில் 7ம்முறை போட்டியிடும் பழுத்த அரசியல் வாதியான ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணித்தலைவர் திரு. செ- சுந்தரலிங்கத்தின் பேட்டிக்கட்டுரையின் இறுதிப்பாகம் இங்கு பிரசுரமாகிறது.]**

சைவசமயத்தை தமிழ் ஈழத்திற் பாதுகாத்தல்; ஈழத்தமிழ் சமுதாயம் முன்னேற முயற்சி எடுத்தல்; ஈழத்தமிழ் இனத்தனி அரசு உருவாக்குதல்',ஆகிய மூன்று முக்கிய நோக்கங்களை முன்வைத்தே திரு. சுந்தரலிங்கம் போட்டியிடுகிறார். தமிழ் ஈழம் எங்கள் தெய்வம்; ஈழப்போர் எங்கள் தர்மம்; ஈழவெற்றி எங்கள் சுதந்திரம் என அவர் அடிக்கடி கூறிக்கொள்வார்.

ஈழத்தமிழ் இன சுதந்திர முன்னணியின் தொண்டர்கள் தன்நலம் கருதாமலும், பதவி ஆசை இல்லாமலும், ஈழத்தமிழ் இனத்துக்காக கஷ்டப்பட்டு உயிர்த்தியாகம் செய்யத் தயாராக உள்ளவர்களாய் இருக்கவேண்டும் என்று திரு சுந்தரலிங்கம் கூறுகிறார். 1803-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி அரோசிபித் என்பவரின் உத்தியோக பூர்வமான இலங்கைப்படத்தைச் சுட்டிக்காட்டி 'இதிலுள்ள தமிழ் ஈழத்தை பெறுவதே எமது லட்சியம் என்றார். இப்படத்திலுள்ளது போல் தமிழ்ஈழம் மீண்டும் உருவாக்கப்படுமானல், ஈழம் பொருளாதாரத்தில் சிங்களத்திலும் பார்க்க பன்மடங்கு சுபீட்சமான நிலையிலிருப்பது நிச்சயமாகும் என்றும் கூறினர். 1799-ம் ஆண்டின் ஹியூகிளெக்ஹொன் என்பவரது குறிப்பின்படி தமிழ்ஈழம் உருவாக்கப்படுமானல் நிதிநிலைமையிலும்பொருள்பண்ட முதன்மையிலும் மேம்பாடுபெற்று விளங்கும் என்றார்.

1964-ம் ஆண்டு முன்னுள் மகாதேசாதிபதி சால்பரி பிரபு எழுதியவற்றைசுட்டிக்

ப: 2500 வருடத்திற்கு முன் வெளியிலிருந்து வந்தவர்கள் சிங்களவர். ஆனல் தமிழர் 5000வருடங்களுக்கு முன்னே இங்கு வாழ்ந்துள்ளார்கள்.

கே: கொரில்லா போர் பற்றி முன்பு எப்போதாவது கூறியிருக்கிறீர்களா?

கே: ஆட்சிமன்றத்தில், பிரதமர் பண்டாரநாயக்காவிடம் என் எண்ணத்தை ஒப்பேற்ற வேண்டுமானல் கொரிலா யுத்தம் வரும் என்றேன்.

கே:- தேர்தல் நேரத்தில் தான் தனிராஜ்யம் கேட்பதாகவும் பின்னர் நீங்கள் ஒதுக்கிவிடுவதாக பலர் கூறுகிறார்களே?-

ப:- விரோதிகள் தூற்றலாம். போராடவேண்டுமென்று முதல் மக்கள் தீர்மானிக்கவேண்டும். அதன் பின் தலைமைதாங்கி நடக்காவிடில், நானே விலகிவிடுவேன். ஹி...ஹி... முன்புபல முறை பதவியை விலகிய அனுபவமுண்டு.

கே:- மற்றும் தமிழ் கட்சிகள்தமிழர்களுக்கு வழிகாட்டாதா?-

ப:- வழிகாட்ட அவர்களுக்கு வல்லமையில்லை. 20வருடம் அவர்கள் தமிழ்மக்களை வழி நடத்தியிருக்கிறார்கள். எவ்வித உரிமையையும்பெற்றுக்கொடுக்கவில்லை.

கே:- நீங்கள் வழிகாட்டுவீர்களென்ற நம்பிக்கை உண்டா?

ப:- ஆம் 1966-ம் ஆண்டு ஐக்கியநாடுகள்சபையில் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. ஓர் இனம் தாக்கப்படுவதாக ஐக்கியநாடுகள்சபைக்கு முறையிட்டால் அந்தமுறைப்பாட்டைக் கவனித்து வழி

டொனமூர்திட்டப்படி அரசாங்கம் அமைக்கப்பட்டது மந்திரிசபையில் சிறுபான்மையினராக. திரு.பெரி சுந்தரமும் மக்கான் மரக்காயரும் இடம்பெற்றார்கள். ஒன்றும் நடக்கவில்லை 2-ம்முறைதேர்தல் வந்தது. யாழ்ப்பாண சங்கம் அரசாங்கத்திற்கு எதிராக நடந்தபடியால், என் வேண்டுகோளின்படி திரு. ஜெயதிலகாவை அனுப்பிவிட்டு திரு மகாதேவாவை மந்திரியாக்கினர். தற்போது 1956ம் ஆண்டுக்குப் பின் மந்திரிசபையில் தமிழர் இல்லை. சிங்கள மந்திரிசபை அமைக்கப்பட்டது. அதற்கு காரணம் யார்? 2 வருடம் திரு. திருச்செல்வம் மந்திரி சபையில் இருந்ததைத் தவிர, 14 வருட காலத்தில் ஒரு தமிழரும் மந்திரி சபையில் இருக்கவில்லை.

இதற்குப் பாத்திரவாளி யார்? எத்தனையோ தமிழ் பிரதிநிதிகள் அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கின்றனர் அப்படியிருந்தும் மந்திரி சபையில் தமிழர் இடம் பெறவில்லை.

காங்கேசன்துறைத் தொகுதியில் வெற்றிபெற்றல் அரசாங்கத்துடன் சேருவீர்களா? என்ற கேள்வியைப் போட்டதும், சுமார் 5 நிமிடம் வரை ஹி...ஹி... என்று சிரித்தபடி இருந்தார். மற்றும் தமிழ்ப் பிரதிநிதிகள் எல்லோரும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதென்று தீர்மானித்தால் என்ன செய்வீர்கள்? என்றேன். எனது நிபந்தனைகளுக்கு அரசாங்கம் கட்டுப்பட்டால் ஒத்துழைப்பேன்'' என்றார்.

''என்ன நிபந்தனைகள்?'' -அவற்றை இப்பொழுது கூறுவது புத்திசாலித்தனம் அல்ல.

'கன்வசிங்' குக்குக் கூட்டிச் செல்வதற்காகச் சிலர் காரில் வந்திருந்தனர். அதனல் அவரிடமிருந்து விடை பெற்றுவந்தோம்.

**பேட்டி- செ சுந்தரலிங்கம் (ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர்**

**நிருபர்- கா. யோகநாதன்**

## கி.சபையின் காசோலை கச்சேரியில் படும்பாடு

யாழ்ப்பாணம், செவ்.

உள்ளூராட்சி மன்றங்களின் பண மாற்றுக்கட்டளைகளைப் பணமாக்குவதற்கு யாழ்ப்பாணம் கச்சேரிக்குச் செல்லும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்களும் பொது மக்களும் அங்கு மிகவும் சிரமத்திற்குள்ளாகுவதாகப் பலர் புகார் தெரிவித்துள்ளனர்.

கணக்குப்பகுதியிலுள்ள ஒரு குமாஸ்தாமூலம் பணம் மாற்றும் கட்டளை சரிபார்க்கப்பட்டு, பின்னர் தலைமைக் குமாஸ்தாவால் மேலொப்பமிடப்பட்ட பின்னர் தான் கட்டளைகளை மாற்ற முடியும். ஆனல் குமாஸ்தா கணக்கைச் சரிபார்த்த பின்னர், அந்தக்கட்டளையையும், சம்பந்தப்பட்ட பேரேடுகளையும் தலைமைக் குமாஸ்தாவிடம் கொண்டுசெல்வதற்கு அங்கு நிரந்தரமான பியோன் இல்லாமலிருப்பதால் காசு மாற்றச்செல்பவரே அவற்றைச் சுமந்து செல்லவேண்டிய நிலையிலிருக்கிறதாம்.

உள்ளூராட்சி மன்றங்களில் வேலைபார்க்கும் அதாவது பணக்கட்டளைகளை எழுதும் பிரதம குமஸ்தாக்கள் கூட தங்கள் சம்பளத்தைப்பெற கச்சேரிக்குச் சென்றல் தமே பியோன் வேலையையும் பார்க்கவேண்டியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட பேரேடுகளை உள்ளூராட்சி

## இன்றைய பலன்

தேர்தல் அட்டை வருகிறது!

## நாளைக்கு வெளியே செல்ல வேண்டாம்

கோட்டை, செவ்வாய்

தேர்தல்அட்டைகள் நாளை 13-ம் திகதி நாடுபூராவுமுள்ள சகல வாக்காளர்களுக்கும் கிடைக்கும். இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன.

நாளை போயா தினமாக இருந்தபோதிலும் தேர்தல் அட்டைகள் தபால் ஊழியர்களால் விநியோகிக்கப் படவிருக்கின்றன. கைச்சாத்திட்டுத்தான் அட்டைகளை பொதுமக்கள் ஒவ்வொருவரும் பெறவேண்டுமாதலால், நாளையதினம் அனைவரையும் வீட்டிலிருக்கும்படி தேர்தல் கமிஷ்னர் திரு. டயஸ் அபயசிங்க வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

நாளை தேர்தல் அட்டை பெருதவர்களுக்கு, நாளை மறுதினம் விநியோகிக்கப் படும். அப்படிக் கிடைக்காதவர்கள் தபால் நிலையங்களுடன் தொடர்புகொள்ளும்படி கேட்கப்படுகின்றனர்.

## அரசியல் கூட்டத்தில் ஆசிரியர் குழப்பம்?

### வழக்கு தொடர உத்தரவு

முல்லைத்தீவு, திங்கள்

முள்ளையவளை காட்டுவிநாயகர் கோவில் வீதியில் நடந்த ஒரு அரசியல் கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் இப்பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் மதுபோதையில் நின்று கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க எத்தனித்தார் என முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு வைத்திய பரிசோதனையின்பின் பிணையில்விடப் பட்டார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர் மீது புதிய தேர்தல் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடருமாறு உதவிப்பொலிஸ் அதிபர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

''சிங்களவரிடம்

## மதிப்புப் பெற்றது தமிழ் காங்கிரஸே''

### ஜி.ஜி.பொன்னம்பலம் கூறுகிறர்

அல்லைப்பிட்டி, திங்கள்

'சிங்களக் கட்சிகளை ஆட்சி மன்றத்துக்கு உள்ளேயும்,வெளியேயும் எதிர்த்துப் போராடும்சக்தி,தமிழ்க் காங்கிரசுக்கு மாத்திரமே உண்டு. அதே நேரத்தில் சிங்களவரின் மத்தியில்மதிப்பும் கண்ணியமும் பெற்றது எமது கட்சியே என்று நான் கூறவிரும்புவதுடன் பெருமையும் படுகின்றேன்''

மேற்கண்டவாறு ஊர்காவற்றுறைத் தொகுதியில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் திரு. நா. தி. சிவஞானத்தை ஆதரித்து அனலைதீவில் நடைபெற்ற கூட்டத்தில்திரு ஜி. ஜி. பொன்னம்பலம் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் தமிழரசார் இது வரையும் தமிழருக்குப் பெற்றுத் தந்த உரிமைகள் எவை? வகுப்புவாதத்தைக் கிளப்பி சிங்களவரின் எதிர்ப்பு மனப்பான்மையையே தமிழரசுக் கட்சியினர் இதுவரை பெற்றுத்தந்துள்ளனர்.

தமிழினம் முன்னேற யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகம் வேண்டுமா அல்லது திருக்கோணமலையில் வேண்டுமா? யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டுமானல் தமிழ்காங்கிரஸையே ஆட்சிமன்றத்துக்கு அனுப்புங்கள் என்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாபனம் கூறுகிறதெனினும் இதைப்பற்றிய விவரங்கள் தரப்படவில்லை. அக்கட்சிஅதிகாரத்துக்கு வந்தால், தங்

விடுவதாயின் அது ஜனநாயகத்தைப் பலப்படுத்த உதவாததுடன் சர்வாதிகார ஆட்டுக்கே அடிகோலுவதாகும்.

## கம்போடியா

அண்டை நாடான வியட்னமில் யுத்தத் தீ பல வருடங்களாகப்பற்றி எரிகையில் கம்போடியா, இந்த ஆபத்திலிருந்து தப்பி இருந்தது. இதற்கு முக்கிய காரணம் அதிபர் சிகானுக் இளவரசரின் மேலான ராஜதந்திரமும் நடுநிலைமைக் கொள்கையுமேயாகும். ஆனால் அண்டையிலே பெரிய வல்லரசுகள் கிளப்பியுள்ள யுத்தத் தீயைத் தமது நாட்டில் இனியும் பரவாமல் தடுக்க அவரது ராஜதந்திரத்தாலும் முடியவில்லை. அவர் தமது நாட்டைவிட்டு வெளிச் சென்றதும், அமெரிக்காவின் ஆதரவுடன் புதிய கம்போடிய அரசாங்கம் அமைக்கப்பட்டு யுத்தத் தீயும் அந்நாட்டில் பரவி விட்டது. கம்போடிய மக்களின் அமைதி குலைந்தது. இனி மீண்டும் அவர்களுக்கு அமைதியான வாழ்வு எப்போது கிடைக்குமோ தெரியவில்லை.

முடி ஆட்சி நடந்து வந்த கம்போடியா, இலங்கையைப் போல் சுமார் மூன்று மடங்கு பெரிதாகும். ஜனத்தொகை 66லட்சம்தான். இயற்கை வளமும் கலை வளமும் மிக்க அது ஒரு பௌத்த நாடு. பிரான்ஸின் ஆதிக்கத்திலிருந்து 17 ஆண்டுகளுக்கு முன் விடுதலை பெற்ற கம்போடியா, யாருக்கும் ஒரு பாவமும் செய்யவில்லை. செய்ய நினைத்ததுமில்லை. எந்த வல்லரசு கோஷ்டியிலும் சேராமல், எல்லாருக்கும் நண்பனாகவே வாழ விரும்பினார்; இளவரசர் சிகானுக். இப்பேர்ப்பட்ட நடுநிலைமை தர்மத்தைக் கடைப்பிடித்த அவராலும் தமது நாட்டை யுத்தத்தீயிலிருந்து காக்க முடியவில்லை.

இப்போது அவர் பரதேசம் சென்று போட்டி அரசாங்கத்தை அமைத்துள்ளார். கம்போடியாவில் யுத்தத்தீ பற்றி எரிந்து, கம்போடிய மக்கள் பெரும் கஷ்டத்துக்கு உள்ளாகியுள்ளனர். அமெரிக்கா சீக்கிரத்தில் தன் துருப்புக்களை ஜனாதிபதி நிக்ஸன் கூறியபடி வாபஸ் பெற்றாலும்தென் வியட்னாம், வடவியட்னாம் துருப்புகள் அங்கிருந்து வெளியேறி அங்கு அமைதி நிலவ முடியுமா என்பது சந்தேகம். உலக அமைதியைக் காக்க வென்று அமைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையாலும், யுத்தம் பரவாமல் காக்க முடியவில்லை வல்லரசுகளின் போட்டி அதிகரித்து மற்றோர் உலக யுத்தமும் சீக்கிரம் மூளக்கூடிய ஆபத்து அதிகரித்து வருகின்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 12—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலையஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 அரங்கேற்றம், 1-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடுபாப்பா.

இரவு6-10இசைப்பயிற்சி, 6-30 கிராம சஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராம சஞ்சிகை, 7-15 நடனம், 7-45 திரைகானம், 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-30 சித்திரம், 8-45 நேயர்கேட்டவை, 9-30 நாடகம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.

## தாக்கப்பட்டன

லண்டன், மே 11

4 சர்வதேச விமான நிலையங்கள் குண்டுவெடிப்புச்சம்பவங்களுக்கு இலக்காகியுள்ளன. இஸ்பானிய விமானங்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டுள்ளது லண்டன், ஜெனிவா உட்பட 4 விமான நிலையங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன.

யிலும்பொருள்பண்ட முதன்மையிலும் மேம்பாடுபெற்று விளங்கும் என்றார்.

1964-ம் ஆண்டு முன்னாள் மகாதேசாதிபதி சால்பரி பிரபு எழுதியவற்றைசுட்டிக்காட்டினார். சமஷ்டி அரசோ அல்லது தமிழ் சுயஅரசாட்சியோ சரியானதாக இருக்கும் என நான் நம்பவில்லை. சமஷ்டி அரசியலானது இலங்கையில் நடைமுறையில் சரிவராத அனுஷ்டிக்க முடியாத சிக்கலான விஷயமாகும் தமிழ்தனி அரசு முறை நடைமுறையில் சரிவரினும், பொருளாதார ரீதியில் கஷ்டமான திட்டமாகும் என சோல்பரி பிரபு எழுதியிருந்தார்.

கே: இலங்கையில் எந்த ஆண்டு வரை தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து இருந்துவந்தது!

ப: 1833-ம் ஆண்டுக்குப் பின்னர் ஓர் அரசாங்க பத்திரத்தில் கையெழுத்துவைக்கவேண்டுமானால ஆங்கிலத்தில் வைப்பார்கள். அரசாங்க விஷயத்தில், நிர்வாகத்தில் ஆங்கிலம் உத்தியோக மொழியாக இருந்தாலும், பத்திரத்தில் தமிழிலும், சிங்களத்திலும் கையெழுத்திட உரிமை வழங்கப்பட்டிருந்தது. சுதந்திரம் கிடைத்து காலஞ்சென்ற பிரதமர் டி. எஸ். சேனநாயக்கா ஆட்சிக்காலம் வரை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மூன்றும் அரசாங்க பாஷையாக நடைபெற்று வந்தது.

கே: உங்கள் லட்சியத்தை எப்படி பெறமுடியும்?

ப: இந்த லட்சியத்தை ஒப்பேற்றவேண்டுமானால் நான் தமிழ் பரம்பரை முறைப்படி ஒப்பேற்ற வேண்டுமென்று பகிரங்கமாக கூறியிருக்கிறேன். அது சாம பேத, தான தண்டம் என்பதாகும். ஆனால் திரு. நவரத்தினம் சாம, பேத, சத்தியாக்கிரக, சட்ட மறுப்பு என்கிறார். நோக்கம் ஒன்றுதான் வழிதான் இரண்டு இதில் என்வழி தான் சரி.

கே: பெரும்பான்மை இனத்தவருக்கு எதிராக சிறுபான்மையினர் ஆயுதப் போர் புரிந்து வெற்றிகாண முடியுமா?

ப: சைப்பிரசில் என்ன நடந்தது கொரில்லா போர் மூலம் வெற்றிகண்டனர். வெள்ளையனை வெளியேற்றினார்கள்.

கே: சிங்களவர் வெளியிலிருந்து வரவில்லையே?

ஐக்கியநாடுகள்சபையில் ஒரு பிரிவு சேர்க்கப்பட்டது. ஓர் இனம் தாக்கப்படுவதாக ஐக்கிய நாடுகள்சபைக்கு முறையிட்டால் அந்தமுறைப்பாட்டைக் கவனித்து வழிகாட்ட ஏற்பாடுசெய்யப்படும். 56-ம் ஆண்டுககுமுன் அப்படிஎதுவும் கிடையாது. ஐக்கிய நாடுகள் சபைககு முறைப்பாடுசெய்ய தனிப்பட்டமுறையில்ஓர்இனமக்களுக்கு உரிமையுண்டு. அதை ஒரு நாட்டுக்கு ஒப்பேற்றுவதினால் அந்தநாடடு அரசாங்கம்சம்மதம் கொடுக்கவேண்டும். இதைப்பற்றி பிரதமர் டட்லியிடம் எழுதினேன். அந்தபிரிவுக்கு கையெழுத்து வைக்கவில்லையென பிரதமர் டட்லி எழுதியிருக்கிறார். தனிப்பட்ட முறையில் முறைப்பாடு செய்யலாம். முதலில் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும். பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்கும்முறைப்பாடுசெய்யலாம்.

கே:- நீங்கள் அரசாங்கத்தோடு ஒத்துழைத்த காலத்தில் தமிழ் உரிமைக்காக ஏதாவது செய்தீர்களா?

ப:- (திடீரென நிமிர்ந்து உரத்த குரலில்) நான் பிரதமர் டி.எஸ். சேனநாயகாவிடம் கூறி, காணி அபிவிருத்தி சட்டத்தில் 'இலங்கையர்' என்ற சொல்லை புகுத்தச்செய்தேன். தற்போது அச்சொல்லு நீக்கப்பட்டுவிட்டது. இலங்கையர் என்றால்சிங்களவர் என்று கருதப்படுகிறது. அச்சொல்லை நீக்கியபோது ஆட்சிமன்றத்திலிருந்த ஒரு தமிழ் எம்.பி. யாவது:- எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. வெளியில் வீரம் பேசுபவர்கள் இப்படியான விஷயங்களில் பேசாமலிருந்து விடுகிறார்கள்.

திடீரென்று நான்ஒருகேள்வியைக் கேட்டேன். அவர் அதற்கு விளக்கமாகப்பதில் தந்தார். சிங்களமந்திரிசபை அமைக்க வழிவகுத்துக் கொடுத்தீர்களாமே? என்று கேட்டேன்.

அவர் கூறியதாவது:-

டொனமூர் அரசியல் திட்டம் வந்தபோது அது பகிரங்கமாகுமுன் டி.எஸ்.சேனநாயகா எனக்குஒரு பிரதி தந்தார். நான் படித்துப் பார்த்து, கெட்டித்தனமாக நடத்தினால், தங்கள் எண்ணத்திற்கு மந்திரிசபைநடத்தலாம் என்பதை கண்டு பிடித்தேன். இதனை பொன். இராமநாதனுக்கும் டி. எஸ். சேனநாயகாவிற்கும் விளங்கப்படுத்தினேன். அந்த சந்தர்ப்பத்தில் குசுகுசு கூட்டம் நடாத்தி. அதனைக்கவர்னருக்கு அறிவித்து மந்திரிசபை சீட்டுப்போட்டு எடுக்கவேண்டுமென்று முடிவாகியது. தமிழ்த் தலைவர் வர் யாராவது எதிர்க்கவில்லை. கடைசியாக முதல்

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 29-ம்திகதி (12-5-70)

**மேஷம்:** கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

**ரிஷபம்;** அற்ப விடயத்திற்குகூட பொல்லாங்கு கேட்க நேரிடும் கோபத்தை அடக்கவும்,

**மிதுனம்:** பழைய நினைவுகள் உங்களை கவலையில் ஆழ்த்தும் பொருள் விரயத்திற்கும் இடமேற்படும். நிதானம் வேண்டும்.

**கடகம்:** சிறு விடயங்களுக்குகூட குறை கேட்க நேரிடலாம். பெரியார் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றும். நாவடக்கம் வேண்டும்.

**சிம்மம்:** பொருள் வரவுக்கும் இடமுண்டு சுற்றாடலில் மதிப்பு உயரும் இறை அருளும் உண்டு.

**கன்னி:** அதிக ஆசைவைப்பதன் மூலம் அவதிப்படுவீர்கள். குறுக்குவழியில் இறங்குவதற்கு எண்ணம் தோன்றலாம் தடைகள்பலவுண்டு. அவசர முடிவைத் தவிர்க்கவும்.

**துலாம்:** குடும்பத்தில்திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித்துறையில் அதிக ஆர்வம் பிறக்கும். இன்று நல்ல தினம்.

**விருட்சிகம்:** இனத்தவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். நீண்ட பிரயாணம் குறித்து திட்டமிடப்படலாம். நல்ல நாள்

**தனுசு:** உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அடைவீர்கள் அரச பயத்திற்கு இடமேற்படும். அமைதி நன்று.

**மகரம்:** வாழ்வுப் பயணத்தில் வளமானதிருப்பம் உருவாகும். பொருள் வரவிலும் திருப்திகரமான நிலை தென்படும்.

**கும்பம்:** கடன் தொல்லை அதிகரிக்கும் நண்பர் ஒருவர் உம்மை தவறான பாதையில் இழுத்துச் செல்வர் மௌனம் நன்று.

**மீனம்:** மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வ நம்பிக்கையில் ஆர்வம் பிறக்கும். நீண்டநாள் மனக்குறை இன்று நிவர்த்தியாகும்,

— சோதிடக் கலாநிதி —

திருமலை க. வேலுப்பிள்ளை

தைப்பெற கச்சேரிக்குச் சென்றால் தமே பியோன் வேலையையும் பார்க்கவேண்டியிருப்பதாகப் புகார் கூறப்படுகிறது. சம்பந்தப்பட்ட பேரேடுகளை உள்ளூராட்சி மன்ற கணக்கப் பிரிவு பிரதம குமாஸ்தாவிடம்சுமந்து செல்லும்படியும் இவர்கள் கேட்கப்படுகின்றனராம். உள்ளூராட்சிமன்றங்களின் தலைவர்களுக்குக் கூட இவ்விதம் நேர்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

கிராமசபையுடன்கொடுக்கல் வாங்கல் செய்யும் சாதாரண கிராமப்புற பிரஜை முதல், பல ஆயிரம் ரூபா தொகைகளுக்கு வேலைசெய்யும் ஒப்பந்தகாரர் வரை யாவருக்கும் பணத்திற்குப் பதிலாக வழங்கப்படும் பணமாற்றுக்கட்டளை மாற்றச் செல்லும் போது கச்சேரியில் பியோன் இல்லாததால் இவர்கள் மிகவும் கஷ்டத்துக்குள்ளாகின்றனராம்.

கிராம சபையால் வழங்கப்படும் பணமாற்றுக்கட்டளைகளுக்கு காசோலைபெற வேண்டியிருந்தால்காசோலை வழங்கும் குமாஸ்தா லீவிலிருக்கும் சமயத்தில் அவற்றைப் பெறமுடியாமலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

## வேறொருவரின் கூப்பன்களை வைத்திருந்தவர் கைது

முல்லைத்தீவு, திங்கள்

முல்லைதீவு உணுப்பிரிவு வாசியான சின்னையா ஐயாத்துரை என்பவரின் வீட்டிலிருந்து கடந்த ஏழு மாதங்களுக்கு முன்னர் காணமல் போன 9 கூப்பன்களில் 5 கூப்பன்கள் ஒரு வீட்டிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன.

முல்லைத்தீவு பதில் கிராம சேவையாளர் திரு. கா. தம்பாபிள்ளைக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து முல்லைத்தீவு 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த எஸ். எம் அப்துல் கசன் என்பவரிடமிருந்து ஐந்து கூப்பன்களைக் கண்டுபிடித்து அவரையும் கைது செய்து முல்லைத்தீவுப்பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். மிகுதி 4 கூப்பன் புத்தகங்களைக் கண்டுபிடிப்பதில் பொலிஸார் கவனம் செலுத்துகின்றனர்.

## பரிசளிப்பு

கோப்பாய், திங்கள்

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றத்தாரால் நடாத்தப்படும் சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்புவிழா இம்மாதம் 29-ந் திகதி மாலை கோப்பாய் வீரபத்திரசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக போட்டியிடும் திரு. நா. தி. சிவஞானத்தை ஆதரித்துஅனலைதீவில் நடைபெற்ற கூட்

## தமிழ் ராஜ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரிதாபநிலைக்குக் காரணம். இரு பிரதான அரசியல் கட்சிகளான தமிழ்க் காங்கிரஸ், சமஷ்டிக்கட்சி இவ்விரண்டும், தமிழர் விஷயமாகக் கையாண்ட தவறான முறைகளும் தவறான போக்கும்தான் என்பதிலும் இருவருக்கும் வேறுபாடில்லை. இவ்விருகட்சிகளையும் சேர்ந்தவர்கள், பார்லிமெண்ட் மெம்பர்களாகத் தெரிவு செய்யப்பட்டால், அவர்கள் தங்களுக்கிடையில் அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டு எதிர்கால ஈழத் தமிழ் சந்ததியினருக்கும் பெரும் தீங்கு ஏற்படச் செய்வாரென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, தமிழ்க் காங்கிரஸ் அல்லது சமஷ்டிக் கட்சி வேட்பாளர் யாரையும் பார்லிமெண்ட் சபைக்கு அனுப்பகூடாதென்பது வரும்பத்தக்கதும் அவசியமானதுமாகும்.

சென்ற இருபது ஆண்டுகளாக இலங்கையின் அரசியல் சரித்திரத்தைக் கவனித்தால், அது சிங்கள அரசியல் துரோகமென்பதும், எந்தைத் தமிழ்த் தலைவரும் சிங்கள அரசியல் வாதிகளையோ அவர்கள் அளிக்கும் உறுதிமொழிகளையோ. ஒப்பந்தங்களையோ இனிமேல் நம்பக் கூடாதென்பதே அவர்களது கருத்தாகும்.

சிங்கள அரசியல்வாதிகள் அல்லது தலைவர்கள் மூலம் ஈழத்தமிழ்மக்களுக்கு எவ்வித விமோசனமும் கிடைக்க முடியாதென்பதிலும் அவர்களுக்குள் கருத்துவேற்றுமை இல்லை.

மேற்குறித்தவற்றின் அடிப்படையில், எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒரு பொதுமேடையில் அவர்கள் செயலாற்றுவார்கள்.

## காங்கேசன்துறை...

(2-ம் பககத் தொடர்ச்சி]

தைப்பாதுகாத்தல் வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தல் சமூக சீர்திருத்தப்பணியில் ஈடுபடல் ஈழத்தமிழ் இன தனியரசு அமைக்க நடவடிக்கைஎடுத்தல் உட்பட மற்றும் நோக்கங்களை முன்வைத்தே போட்டியிடுவதாகஇவர் தெரிவிக்கின்றார்

திருக்கோணமலையில் வேண்டுமா? யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் வேண்டுமானால் தமிழ்காங்கிரஸையே ஆட்சிமன்றத்துக்கு அனுப்புங்கள் என்றார்.

## பிரதமர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தேன் பாடசாலைகளில் முஸ்லிம் ஆசிரியர்களின் தொகையையும் அதிகரித்துள்ளேன். ஆனால் தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முஸ்லிம்மக்களுக்கு ஒருவித சலுகையும் அளிக்கவில்லை ஐ. தே. கட்சி கடந்த தேர்தலின் போது முஸிலிம் மக்ளுக்குப் பாய் வாக்குறுதிகளைக் கொடுத்து அவர்களை ஏமாற்றி அவர்களது தொகுதிகள் சிலவற்றை கைப்பற்றியுள்ளது முஸ்லிம் மக்களுக்குச் சலுகைகள் வழங்காது தமிழரசாருக்கே தேசிய அரசாங்கம் வழங்கியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

## கரையோர...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

எப்போது கரையோர மக்களுக்கே பயனாக வேண்டுமென்று கருத்துடையேன்.

மோதிலால் நேரு, திரு. அன்ரனி உட்பட பலர் இக் கூட்டத்தில் பேசினர்.

## இங்கு வரும் பிரிட்டிஷ் றகர் கோஷ்டி

லண்டன், மே 1

பிரபல்யம் பெற்ற பிரிட்டிஷ் றகர் விளையாட்டுக் கோஷ்டியினர் இம்மாதம் இலங்கை வருகிறார்கள். லண்டனிலுள்ள 'பிளாக் ஹீத் எனப்படும் இக்கோஷ்டி இலங்கையில் ஐந்து விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றும் இவற்றில் இரு போட்டிகள் பிரிட்டிஷ்வீரர்களுக்கும் இலங்கை றகர் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையில் நடைபெறும். இங்கிலாந்து கோஷ்டி மே மாதம் 20-ம் திகதி இலங்கை வந்து சேரும்.

'பிளாக் ஹீத்' விளையாட்டுக்குழு உலகிலேயே மிகப் பழமையான றகர் விளையாட்டுக் கழகமாகும். 1858 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கியிருக்கிறது: சர்வதேச ரீதியான சுற்றுப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றிவாகை சூடிவரும் இக்கோஷ்டியினர் இம்முறை இலங்கையை தெரிவுசெய்துள்ளனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 12-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org